யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 18 திங்கட்கிழமை (03-09-2001) தொலைபேசி: 3378 ஒலி: 266

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்:
[கி-2127]

★ சர்வஜனவாக்கெடுப்பு ரத்து

★ பாராளுமன்றம் 6ஆம்திகதி கூடும்

★ அமைச்சர்களின் எண்ணிக்கை 20ஆக குறைப்பு

# ஜே. வி. பியின் நிபந்தனைகளுக்கு
# பொ. ஐ. ஐ.மு. அரசு அடிபணிந்தது

## காலக்கெடு முடியமுன் பிரதமர் பதில்

(நமது விசேட நிருபர்)

"தகுதிகாண் அரசு" ஒன்றை அமைப்பது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) பொதுஜனஐக்கிய முன்னணி அரசிடம் முன்வைத்த மூன்று அம்சக்கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஜே வி. பியின் பிரதம செயலாளர் ரில்வின்சில்வா விற்கு கடிதம் ஒன்றை நேற்று நள்ளிரவு அனுப்பி வைத்துள்ளார். இக்கடிதத்தில்;

★ சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்வதாகவும்,

★ செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஒத்தி வைத்த பாராளுமன்றக் கூட்டத்தை 6 ஆம் திகதி வியாழக்கிழமை கூட்டுவதாகவும்

★ அமைச்சர்களின் எண்ணிக்கையை 45 இல் இருந்து 20 ஆகக் குறைப்பதாகவும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதிகாண் அரசினை அமைப்பது தொடர்பாக ஜே.வி;பி விதித்த நிபந்தனைகளை ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஏற்றுக் கொண்டு அது தொடர்பான கடிதத்தை பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா நேற்று நள்ளிரவு வேளை ஜே.வி.பிக்கு அனுப்பிவைத்தார்.

அரசின் முடிவுக்காகஜே. வி: பி விதித்திருந்த காலக்கெடு முடிவதற்கு சிலநிமிடங்கள் இருப்பதற்கு முன்னதாகவே இக்கடிதம் அனுப்பிவைக்கப் பட்டது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொன்விழா நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு

→8 ஆம் பக்கம் பார்க்க

## பீரிஸ், திஸநாயக்க, மகிந்த உட்பட
## சிறுபான்மையினக் கட்சிகளின்
## அமைச்சர்களுக்கும் கல்தா?

## பிரான்ஸ் புலிகளை தடை செய்யாது

(வவுனியா)

இலங்கை அரசின் கோரிக்கைகளுக்கிணங்கி விடுதலைப் புலிகளைத் தடை செய்யப் போவதில்லை என பிரான்ஸ் அறிவித்துள்ளது;

இது தொடர்பாக பிரான்ஸ் வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் வெளியிட்ட அறிக்கையில்;

விடுதலைப் புலிகளை தடை செய்யவேண்டும் என்ற இலங்கை அரசின் வேண்டுகோளை தாம் ஏற்க்கப்போவதில்லை என்றும் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் வன்முறைகளை பற்றி எமக்கு நன்றாகத் தெரியும் என்றும் குறிப்பிட்டார். (ந-4)

## இனப்பிரச்சினை தீர்வுபற்றி ஐ.தே.கட்சி பேசவில்லை
## அமைச்சர் அலவிமௌலானா

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஐக்கிய தேசியக் கட்சியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அவர்கள் ஆட்சி அதிகாரத்திலும் மந்திரி பதவிகளிலும் ஆர்வம் காட்டினார்களே ஒழிய இனப்பிரச்சினை தீர்வுக்குரிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கடலில் கைதானவர்களில் 26 மீனவர்கள் விடுதலை

[புலோலி]

பருத்தித்துறைக் கடற்பரப் ...

வர்களில் 26பேர் நீதிமன்ற உத்தரவுக்கமையநேற்றுபருத் ...

(கொழும்பு)

ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கமைவாக அமைச்சர்களின் எண்ணிக்கையை 46 இலிருந்து 20 ஆக குறைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இணங்கியதையடுத்து சிறுபான்மைக்கட்சியைச்சேர்ந்த அமைச்சர்கள் நீக்கப்படலாமென அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

46 அமைச்சர்களில் ஏற்கனவே ஜனாதிபதியால் தூக்கி எறியப்பட்ட ரவூப் ஹக்கீம் போக, எஞ்சிய 45 அமைச்சர்களில் 25 அமைச்சர்களுக்கு 'கல்தா' கொடுக்க வேண்டியிருப்பதால் சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களும் 'கல்தா' செய்யப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதியுடன் முரண்டுபிடித்து வந்த அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், எஸ்.பி திஸநாயக்கா, மகிந்தவிஜயசேகரர் ஆகியோரின் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்படுவது உறுதியாகி விட்டதெனவும் தெரியவருகிறது.

8ஆம் பக்கம் பார்க்க

[புலோலி]

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 42 மீனவர்களில் 26பேர் நீதிமன்ற உத்தரவுக்கமையநேற்றுபருத்தித்துறை பொலிசாரால்விடுதலை செய்யப்பட்டனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஜனாதிபதி முகம் கொடுப்பாரா?

## ரவி கருணாநாயக்கா கேள்வி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் மக்கள்விடுதலைமுன்னணி (ஜே வி.பி) யும்இணைந்து தகுதிகாண் அரசாங்கம் அமைத்தாலும் ஜனாதிபதிக்கு துணிவுஇருந்தால் பாராளுமன்றத்தை செப்ரம்பர் 7ம்திகதி கூட்டி நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைஎதிர்கொள்ளட்டும்என்று ஐக்கியதேசியக்கட்சி எம்.பி ரவிகருணநாயக்கா நேற்றிரவு தெரிவித்தார்;

பொதுஜனஐக்கியமுன்னணி அரசும் ஐக்கியதேசியக் கட்சியும்ஒன்றுதான் என்று கூறி வந்த ஜே வி.பியினர் இன்று

(08ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எவருடனும் கூட்டுச்சேர தயார்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ் நிலையில் அதனை நீக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும், பயங்கரவாதப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், நான் எவருடனும் கூட்டுச் சேர்ந்து செயல்படத் தயாராகவுள்ளேன்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொன்விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்;

நாடு இன்று பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. இந்நிலையில் தொடரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவும் பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து ஒழிக்கவும் எவருடனும் கூட்டுச்சேர்ந்துசெயற்படத் தயாராகவுள்ளேன்.

இதன் ஒரு கட்டமாகவே ஜே வி.பியுடன் அரசாங்கம் பேச்சு நடத்தியது. நாட்டின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றியடைய உறுதியுடன் செயற்பட உள்ளேன்.

→8 ஆம் பக்கம் பார்க்க

# கிறிக்கெற் ரெஸ்ட்போட்டியில் இலங்கை அணிக்கு மாபெரும் வெற்றி

(கொழும்பு)

கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்த இலங்கை இந்தியஅணிகளுக்கிடையேயான கொக்கோ கோலா கிண்ணத்திற்கான கிறிகெற் ரெஸ்ட் தொடரின் இறுதிச் சுற்றுப் போட்டியில் இலங்கையணி இந்தியஅணியைஒரு இனிங்ஸ் 77 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிமுதல் இனிங்ஸில் 234 ஓட்டங்

→08ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## 22ஆம் நூற்றாண்டில்

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளும் கவின்கலைகள் கையாளும் சமய அனுஷ்டானங்கள் மூலம் பிரதிபலிக்கப்படலாம்.

விழுமியங்கள் தலைமுறைக்குத்தலைமுறை மாறுகின்றன இடத்துக்கிடம் வேறுபடுகின்றன முரண் ஏற்படுகின்றபொழுது தலைமுறை இடைவெளியெனக் கூறிப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்கிறோம் விழுமியம் பேணலில்மொழி ஒன்றும் பெரிய பங்கேற்பதில்லை கவின்கலைகளிலே சிறப்பாக ஆடல்பாடலுக்கு மொழி அவசியமாகிறது தொன்று தொட்டே இங்கு பிறமொழி ஆதிக்கம் நிறையவேஇருந்து வருகிறது தியாகையர், முத்து தீட்சிதர், சியாமா சாஸ்திரி என்ற சங்கீத மும்மூர்த்திகள் கீர்த்தனைகள் ஒன்றுமே தமிழில் இருந்ததில்லை இசைவாணர்கள் இவர்களுக்கு முதலிடம் கொடுத்தமையால் கோபாலகிருஷ்ணபாரதியோ ஊத்தக்காடு வெங்கடகவியோ பெரும் அளவிலேஆதிக்கம் செய்ய முடியவில்லை சென்றநூற்றாண்டின் நடுப்பகுதியிலே செட்டிநாட்டரசர் அண்ணாமலைச்செட்டியார் பாரதியார் கல்கி இராஜாஜி பாரதிதாசன் போன்றோரின் நன்முயற்சியால் தமிழ்இசைக்குச் சற்றுகௌரவம் ஏற்பட்ட போதிலும் இன்றும் பலமேடைகளிலே தெலுங்கு சமஸ்கிருதக் கீர்த்தனைகளே கச்சேரிகளின் பிரதான அங்கமாகின்றன என்பதை மறுப்பதற்கில்லை ஆனாலும் ஒன்றில் சந்தோசப்படலாம் தமிழ்நாட்டிலே தெலுங்கு சமஸ்கிருத கீர்த்தனைகளைத் தமிழிலேயே எழுதியனனம் செய்கிறார்கள் இந்தநிலை வெளிநாடுகளில் தலைகீழாக மாறி விட்டதைகாண முடிகிறது வெளிநாடுகளில் வாழ்கின்றவர்களின் பிள்ளைகள் பெரும்அளவிலே கவின் கலைகள் கற்கவேசெய்கின்றனர் ஆனால் இவர்கட்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள தமிழ்ப்பாடல்களைஆங்கிலத்திலேயே எழுதிக்கொடுக்கிறார்கள் இந்தநிலைதொடருமானால் முதலில்மறையப் போவது தமிழ்எழுத்துக்களே வேறுபலமொழிகள் தமது எழுத்துக்களாக உரோமன் எழுத்துக்களைக்கைக்கொண்டது போன்று தமிழும்தமிழ் எழுத்துக்களைக் கைவிட்டு உரோமன் எழுத்துக்களைப் பாவிக்கின்ற நிலை மிகவிரைவில் வரலாம்.

தென்ஆபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்த ஒருவர் சிவசங்கரி என எண்ணுகிறேன் அங்கே தமிழ்எழுதவாசிக்கப் பேசத்தெரியாத தமிழர்

என்ற பொதுப்பாடான மென்பொருள் உருவாக்கப் பட்டது: ஆனால் எழுத்துரு ஆக்குபவர்கள் கலைஞர் 99 இன்படி செயற்படுகின்றார்களா என்பது சந்தேகம்.

தமிழர்கள் குடியேறிய பெரும்பான்மையான நாடுகளிலே அந்நாட்டு அரசாங்கங்களின் அனுசரணையுடனோ, அல்லது பொது நல நோக்குடைய சங்கங்களின் மூலமாகவோ மற்றும் தனிப்பட்டோர் முயற்சியாலேயோ தமிழ் சிறார்கட்குப் போதிக்கப்படுகிறது. இதில் கனடா முன்னோடியாக அமைந்துள்ளது. பல்கலைக்கழகம் புகவேண்டிய 30 விசேடசித்திகளில் மூன்று தமிழாக அமையலாம் OAC க்குத்தேவையான ஆறு விசேடசித்திகளில், ஒன்றினைத் தமிழில் பெற்றுக்கொள்ள முடியும். தமிழ்க் கலைகள், தொழில்நுட்பக்கல்லூரி கத்தோலிக்க கல்விச் சபையின் ஆதரவுடனும், ரொறன்ரோ கல்விச்சபை, பீல் கல்விச் சபை, யோக் பிராந்திய கல்விச் சபை ஆகியனவும் விசேட சித்திக்கான தமிழ் வகுப்புக்களை நடத்துகின்றன. தமிழ்க் கலைகள் தொழில் நுட்பக் கல்லூரி, தமிழ்நாடு மனோன்மணியம் பல்கலைக் கழகத்தின் ஆதரவுடன் தமிழ் பட்டப்படிப்புக்குரிய பாடபோதனை செய்கின்றதையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

இவை தவிர சிறார்களுக்கான தமிழ்வகுப்புக்கள் ஒன்ராறியோ மாகாணத்தின் பல்வேறுபகுதிகளிலும், மொன்றியால். வான்கூவர், மாநிலங்களிலும் நடைபெறுகின்றன. இவை போன்று அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், ஐக்கிய அமெரிக்கா, போன்ற இடங்களிலும் நடைபெறுகின்றன. ரொறன்ரோவிலும் அவுஸ்ரேலியாவிலும் பாடநூல்கள் ஆக்கப் பட்டுள்ளன.

தமிழ் கற்பிப்பதற்காக பாப்பா பாரதி, தமிழ் ஆரம் போன்ற வீடியோக்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வளவும் போதாதா எனப் பலர் வினவலாம். கல்லில் நார் உரிப்பது என்பார்களே அதற்கு சிறந்த உதாரணம் சிறார்களுக்கு தமிழ் கற்பதற்கு அக்கறையே இல்லை. பெற்றோர்கள நிர்ப்பந்தத்தால் வருகிறார்கள் தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்பியவுடன் தமிழ் கற்பிப்பதில் தம் பங்கு முடிவுற்று விட்டதாக பெற்றோர் கருதுகிறார்கள். அனேகமான வீடுகளின வீட்டு மொழியாக ஆங்கிலம் வந்து விட்டது. பெற்றோர்கள் பிள்ளைகளு

# யாழ்-கண்டி வீதியைத் திறக்கவும் பருத்தித்துறைபிரதேச சபைதீர்மானம்

(புலோலி)

வவுனியாவிலிருந்து வன்னிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித் துணையுடன் நடைபெற்று வரும் தரைவழிப் போக்குவரத்துப் போன்று கண்டி வீதியைத் திறந்து யாழ்ப்பாணத்திற்கும் தென்பகுதிக்குமான தரைவழிப்பாதைப் போக்கு வரத்தை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் வழித்துணையுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரதேச சபை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப்புலிகளின்இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோரைக் கேட்பதெனத் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாண மக்கள் தமது அத்தியாவசிய தேவைகள் கருதி தென்பகுதிக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இருப்பதனால் இந்நடவடிக்கை மிக முக்கியமானதென்றும், உணவு மருந்துப் பொருட்களைக் கொண்டுவருவதற்கும், வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்வதற்கும், நேர்முகப்பரீட்சைகள், திணைக்கள நடவடிக்கைகளுக்கும் முக்கிய தேவைகளுக்கும் யாழ்ப்பாண மக்கள் பிரயாணம் செய்வதற்கு சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்னர்.

இவர்களின் இச் சொல்லொணாக் கஷ்டங்களை நீக்க யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை மிக முக்கியமானதென்றும் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இக் கோரிக்கைகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் ஆகியவற்றிற்கும் அனுப்பப்படவுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்திலே ஏகமனதாகத்தீர்மானிக்கப் பட்டுள்ளது (க-52)

கூடாது அமைப்புக்கள், சங்கங்கள், தொலைக்காட்சியில் சிறார்களுக்கான நிகழ்ச்சிகள் பல நடத்த வேண்டும்.

பரத நாட்டியம், கர்நாடக இசை கற்பிப்போர் பலருக்கு தமது கவின் கலையில் உள்ள அபிமானம் தமிழில் இல்லை என்பது வருத்தத்துக்குரிய செய்தி. தமிழ்இசைக்கு முக்கியம் கொடுத்துகற்பிக்க வேண்டும். ஒரு காலத்தில் போதிய தமிழ் இசைப்பாடல்கள் இல்லாதிருந் திருக்கலாம் இப்போ நிறையவே தமிழ் இசைப் பாடல்கள் உண்டு ஆகவே தெலுங்கு, சமஸ்கிருதகீர்த்தனைகளை முற்றாகவே விட்டுவிடலாம் மேலும் புலம் பெயர்ந்த நாடுகளில் பாடல்களை ஆங்கிலத்திலோ வேறொரு மொழியிலோ எழுதிக் கொடுப்பதை முற்றாக விட்டொழிக்கவேண்டும்கற்க வரும் மாணவர்கட்கு முதற் சில வாரங்கள் தமிழ் மொழி கற்பிப்பது வரவேற்கத்தக்கது ருஷ்யா, யப்பான், போன்ற நாடுகளுக்குக் கல்வி கற்கப் போகிறவர்களுக்கு முதலில் அந் நாட்டின் மொழி தானே கற்பிக்கப் படுகிறது. கவின் கலை கற்பிக்கும் ஆசிரியர்கட்கு மொழிப் பற்றும் இருத்தல் அவசியம்.

14/03/2000த்து மின் அம்பலம் எனும் இணையச்சஞ்சிகையில் பிரபல எழுத்தாளர் அ. முத்துலிங்கம் புத்தாயிரத்தில் இன்டர்நெற்றும் தமிழும் என ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் தமிழ் உச்சரிப்புப் பற்றிக் குறிப்பிட்டு போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் பத்துவருடங்களில் வேறு ஓர் மொழி போன்று தமிழ் வந்து விடும் என்கிறார்,

அடுத்து மிக முக்கியமானதும் சர்ச்சைக் குரியதுமான விடயம் நமது ஆலயங்களில் நடைபெறுகின்ற வழிபாடு ஆராதனை முறைகளில் மாற்றம் கொண்டுவருதல் மிக அவசியம் கோவில் பூசைகளும் ஏனைய சமய சம்பிரதாய நிகழ்வுகளும் முழுமையாகத் தமிழிலேயே நடத்தப்படல் வேண்டும். வடமொழிச் சுலோகங்கள் தமிழிலே கூறப் படும்போது எவ்வளவோ சுருக்கலாம் என்பது மாத்திரமல்ல கிரியைகள் செய்ய எடுக்கும் நேரமும் பெருமளவில் குறையும் சிறுவர் சிறுமிகளுக்கும் என்ன நடக்கிறது என்பது புரியும்.

## தோட்டத் தொழிலாளர் பாதிப்பு

மலையகப் பகுதியில் தற்போது நிலவும் கடும் வறட்சியினால் தேயிலைத் தோட்டங்கள் கருகிச் சேதமடைந்துள்ளன.

இதன் காரணமாக வாரத்தில் ஒரு நாள் மட்டுமே தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது.

இதனால் தொழிலாளர்கள் வருமானமின்றி பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். [செ]

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

[இணுவில்]

இணுவில் தெற்கு நடுவிளாத்தி ஞான வைரவர் ஆலயத்தில் மஹோற்சவ காலங்களில் ''பெரிய புராணம்'' என்னும் தலைப்பில் தொடர் சொற் பொழிவாற்றிய சச்சிதானந்தனுக்கு'' தெய்வத் தமிழ்ச் செம்மல்'' என்ற பட்டம் மேற்படி ஆலய தேவஸ்தானத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. [செ-49]

## சுகாதார கல்வி நிகழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையின் கீழ் உள்ள பகுதியில் நாளை 4 ஆம் திகதிசுகாதார

## நடமாடும் சேவை

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை இன்று கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க சனசமூக நிலையத்தில் காலை முதல் மாலை வரை நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவைமூலம் இப்பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென்றும், இச் சேவையில் மக்களை இணைந்து கொள்ளுமாறும் கிராம உத்தியோகத்தர் எஸ். முத்துக்குமாரசாமி தெரிவித்துள்ளார். [இ]


## எண் சோதிடம்

எண்களே இன்றைய உலகில் முதலிடம் வகிக்கிறது: எண்களை நீங்கள்துணைகொண்டால், எண்களே உங்கள் வாழ்வுக்கு துணையாக வருகிறது. வெற்றிகரமான, அதிர்ஷ்டகரமான நல்வாழ்விற்கு வழிவகுத்துத் தருகிறது எண் ஜோதிடம். இன்றே உங்கள்

பயணம் செய்த ஒருவர் சிவசங்கரி என எண்ணுகிறேன் அங்கே தமிழ்எழுதவாசிக்கப் பேசத்தெரியாத தமிழர்கள் தமிழில் தேவாரம்பாடித் துதிப்பதாக எழுதியிருந்தார் இதேபோன்றுமேற்கிந்தியத் தீவுகளிலும் தமிழில் தேவாரம் பாடுகின்றதமது வேர்கள் பற்றித் தெரியாத அப்பிராணிகள பலர்உள்ளனர் ஆகவே தமிழ்என்று தெரியாமல் தேவாரங்கள் கர்நாடக இசைப்பாடல்கள் மூலம் தமிழ்தாக்குப்பிடிக்க முனைகிறது.

அப்படியானால் தமிழை அழிவிலிருந்து காப்பாற்ற முடியாதா; முயன்றுபார்க்கலாம்.

இணையத்தில் ஆங்கிலத்திற்கு அடுத்ததாக ஆக்கிரமிப்பது தமிழ் எனப் பெருமைப்பட்டாலும் அங்கே கூட நம்மவரின் சிறுபிள்ளைத்தனம் தெற்றெனத் தெரிகிறது. வானளாவிய ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலத்துக்கு ஒரேயொரு (Software) தான் உண்டு ஆனால் தமிழுக்கோ 20 க்கு மேல் எத்தனைஆயிரம் எழுத்துருக்கள் (Fonts) உருவாக்கினாலும் ஒரு நியமமான மென்பொருள் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். இந்த நோக்கிலேயே தமிழ் நாட்டு அரசு இணையம் 99 என்ற கருத்தரங்கினை நடத்தியது; அதன் விளைவாக கலைஞர் 99

வீடுகளின வீட்டு மொழியாக ஆங்கிலம் வந்துவிட்டது. பெற்றோர்கள் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் கலந்துரையாடுகின்றனர். அல்லது பெற்றோர்கள் தமிழில் பேச பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேச்சுவார்த்தை மணிப்பிரவாளம் ஆகின்றது; எனவே அதிகமான தமிழ்ப் பிள்ளைகட்குத் தமிழ் இரண்டாவது மொழியாகவே போதிக்கப்படவுள்ளது.

ஒன்ராறியோ மாநில அரச பாரம்பரிய கல்வி (Heritage Language) என்ற தத்துவத்தினை அனைத்துலக மொழி (International Language) என மாற்றியுள்ளதின் அடிப்படைக் கொள்கையை இங்கே கூறுதல் அவசியமானது: ஆங்கிலம் தவிர பிறிதோர் மொழியினை ஒருவர் கற்பாராயின் கூடுதலான மக்களுடன் தொடர்பு கொள்ளல் சாத்தியம் எனவே எமது பெற்றோர்கள பிள்ளைகட்குத் தமிழ் கற்பதிலும்பார்க்க சீன மொழி. ஜேர்மன்மொழி போன்றவற்றை கற்பிப்பதால் கூடிய அனுகூலம் உண்டு எனக் கருதி அவ்விதம் கற்பிக்க முனையலாம் அப்படியானால் தமிழின்கதி?

புலம் பெயர்ந்த நாடுகளின் பெற்றோர்களில் நிறையவே தங்கியுள்ளது தமிழ் வீட்டு மொழியாக மாற வேண்டும் மறந்தும் வீட்டில் தமிழ்தவிர வேறு மொழிகளில் பேசுதல்

நேரமும் பெருமளவில் குறையும் சிறுவர் சிறுமிகளுக்கும் என்ன நடக்கிறது என்பது புரியும்.

ஒவ்வொரு ஆலயத்திலேயும் ஓதுவார், உபதேசியார் நியமிக்கப்பட வேண்டும். வெறுமனே குருக்கள் பூசை செய்வதோடு நில்லாமல் கிறிஸ்தவ ஆலயங்களில் நடைபெறுவது போல் ஓதுவார் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற வேண்டும். பஜனை என்று நான் இங்கு சொல்லமாட்டேன் புலம்பெயர்ந்தநாடுகளிலேபஜனை என்றதும் சாயி பஜனையையே நினைக்கிறார்கள் போகிற போக்கினை பார்த்தால் அதுவும் ஒரு கிளைச் சமயமாகி விடுமோ என ஐயுற வேண்டி உள்ளது அவர் ஒரு மகான்வணக்கத்துக்குரியவர். பஜனைப் பாடல்களும் பெரும்பாலானவை வடமொழி அல்லது தெலுங்கு அவரதுதாய்மொழிதெலுங்கு எனவே அது அவரைப் பொறுத்த அளவில் நியாயமானதே.

அற்புதமான ஆழமான கருத்துச் செறிவுடைய தேவார திருவாசகங்கள் பாடப்படுவது குறைந்து கொண்டு வருவது வருத்தத்துக்குரியதே. தமிழ் வாழ வேண்டும் சமய உணர்வு வேண்டும் அது தமிழ் உணர்வோடுவர வேண்டும்என்றால் தமிழில் தேவார திருவாசகங்கள் ஓதப்பட வேண்டும். □

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிபணிமனையின் கீழ் உள்ள பகுதியில் நாளை 4 ஆம் திகதிசுகாதார கல்வி நிகழ்ச்சி இடம் பெற உள்ளது.

அன்று காலை 10.00 மணிக்கு தம்பாட்டிகாந்திசன சமூக நிலையத்திலும்பிற்பகல் 1.00 மணியளவில் மெரிஞ்சி முனை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் மேற்படி நிகழ்ச்சி இடம்பெற உள்ளது.

புழுநோய், போசாக்குணவு உளநோய் தொடர்பான திரைப்படக் காட்சியும் கருத்துரையும்இடம்பெறஉள்ளது.

[க-75]

அதிர்ஷ்டகரமான நல்வாழ்விற்கு வழிவகுத்துத் தருகிறது எண் ஜோதிடம். இன்றே உங்கள் (ஆங்கில பிறந்த திகதி) பெயர் கையொப்பம் இட்டு, சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும்

சனி, ஞாயிறு மட்டும் நேரில் சந்திக்கலாம்.

எண்கலை ஆசான்.
சி. சி. கே
ஸ்ரீராஜராஜேஸ்வரன்
வித்தனை வீதி,
வல்வெட்டித்துறை.
(3506)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

1999 மார்ச் 26ந் திகதி நடைபெற்ற மத்திய அரச தட்டெழுத்தாளர் (தமிழ்) ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்தியடைந்த 44 பேரில் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தைச் சேர்ந்தோர் 20 பேர் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

**இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் கழகம் மகிழ்ச்சியடைகிறது.**

குறிப்பு: புதிய சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சி வகுப்புக்கள் 14-09-2001ல் ஆரம்பமாகிறது. ஆர்வமுடையோர் நேரில் தொடர்பு கொள்ளவும். ஒரு வருட பயிற்சிக்கான மொத்த சேவைக் கட்டணம் ரூபா 350/- மட்டுமே.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.
வதிரி, கரவெட்டி.
[3508]

# தமிழ் மொழியும் பண்பாடும் வளர அயராது உழைத்த பெருந் தலைவர்

இன்று உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மறைந்த தலைவர் அமரர் இர. ந. வீரப்பனின் 3 வது நினைவு தினம்.

அமரர் பேராசிரியர் டாக்டர் இர. ந வீரப்பனால் உலகளாவிய ரீதியில் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். அன்னார் 25 ஆண்டுகளுக்கு மேலாக உ. த. ப. இயக்கத்தின் தலைவராக இருந்து தமிழ்ப்பணி புரிந்த பெருமகன். உலகில் தமிழர்கள் வாழ்ந்து வரும் 55 நாடுகளில் தொடர்பையும் நட்புறவையும் உண்டாக்கி வளர்த்த பெருமை இவரையே சாரும். உலகில் பல்லாண்டு காலங்களாக அறியப்படாதிருந்த தமிழர் சமுதாயத்தின் இருப்பினை பல நாடுகளுக்குச் சென்று அறிந்து அறிவித்தவர் பேராசிரியர் வண. தனிநாயக அடிகளார் ஆவார். ஆயினும் இந்தத் தமிழ்ச் சமுதாயத்தினரிடையே புகுந்து அவர்களின் தொடர்பைக் கண்டவர் வீரப்பனார் ஆவார்.

### நூல்கள்

இலங்கையில் 1930 ஆம் ஆண்டு கண்டியில் பிறந்த இவர் குழந்தைப் பருவத்தில் பெற்றோருடன் மலேசியாவுக்குச் சென்று குடியேறினார். இவர் மலேசியத் தமிழர்களிடையே ஒரு விடிவெள்ளியாகத் தோன்றிய உண்மையை பின்னாளில் மக்கள் அறிந்துகொண்டார்கள். இவர் சிறந்த கல்விமானாக விளங்கியவர். மலேசியாவில் தமிழ் எழுத்தாளர் கழகம் மற்றும் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து எழுத்துத் துறையை வளர்த்து வாழ்ந்தவர். 150 க்கு மேற்பட்ட தமிழ் ஆங்கில நூல்களை எழுதியிருக்கிறார். மலேசியாவில் தோட்டத் தொழிலாளர்களுக்காக உரிமைக் குரல் எழுப்பிப்பணி செய்தவர்.

### தமிழ்ப்பணி

தமிழர்கள் வாழ்ந்து வரும் 28 நாடுகளுக்குப் பலமுறை பயணங்கள் மேற்கொண்டு அவர்களின் பிரச்சினைகளை அறிந்து வந்து வெளியிட்டவர். 1982 ஆம் ஆண்டில் நமது நாட்டுக்கு வருகை தந்து இலங்கைக் கிளைப் பிரமுகர்களைச் சந்தித்து உ.த.ப. இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்க மூட்டிச் சென்றவர். பல நாடுகளில் உ. த. ப. இயக்கத்துக்கு கிளைகள் நிறுவி ஆங்காங்கே பொருத்தமான பெருமக்களை இனங்கண்டு அவர்களின் மூலமாகத் தமிழ்ப்பணி கண்டவர். இந்த மாபெரும் உலக அமைப்புக்கு 7 உலகமகா நாடுகள் நடத்தி வெற்றி சேர்த்த பெருமை இவரையே சாரும்.

### இலங்கைத் தமிழர்பால் கரிசனை

இவரின் அறிவாற்றல் மற்றும் தமிழர் முன்னேற்றத் தொண்டுப் பணிகளை மதிப்பிட்டு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டமளித்து கௌரவித்துள்ளது இத்தகு பெருமைக்குரிய அமரர் வீரப்பனார் இலங்கை வாழ் தமிழர் பால் மிகுந்த கரிசனை உள்ளவராக விளங்கி வந்தார். இந்தப் புகழ் பூத்த தமிழ் பெருந்தகை அன்புக்கும், பண்புக்கும் இனிய சுபாவத்துக்கும் பெயர் பெற்று வாழ்ந்தவர். இவர் விட்டுச்சென்ற உலகளாவிய தமிழர் நற்புறவு, ஒருங்கிணைப்புப் பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது இன்றைய தேவையாகும். இதனைச் செய்ய உ.த.ப இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு தமிழ் அபிமானிகளின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

**ஆ. சண்முகலிங்கம்**
தலைவர்
(இலங்கைக்கிளை)
உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம்

# துன்னாலை இளம் பெண் மர்ம மரணம்

## வைத்திய சாலையில் சடலம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலையில் வசித்து வந்த இளம் பெண் ஒருவர் மர்மமான முறையில் மரணமான சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப இளம் பெண்ணின் சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சின்னத்தம்பி உதயராணி (வயது 30) என்பவரே மர்மமான முறையில் மரணமானவராவார்.

இம் மரணம் தொடர்பாக இறந்தவரின் சகோதரர் தெரிவிக்கையில்;

தனது சகோதரி சில வாரங்களுக்கு முன்னரே திருமணம் செய்தவர் என்றும் ஆனால் சகோதரியின் கணவரோ சில தினங்களுக்கு முன்னர் வேறு திருமணம் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தனது சகோதரி மனமுடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

இவரது மரணம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பெண்மணி வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-4)

# பஸ்பள்ளத்தில்பாய்ந்ததில் மூவர் பலி; 35 பேர்காயம்

(கொழும்பு)

விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கருகே பயணிகள் பஸ் ஒன்று பள்ளத்தில் பாய்ந்ததில் மூன்று பேர் பலியானதுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

கண்டியிலிருந்து உடப்புசல்லாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த பஸ்வண்டி விக்டோரியா அணைக்கட்டிற்கருகே இருநூறு அடி பள்ளத்தாக்கில் வீழ்ந்ததிலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் பேராதனைப் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (செ)

# மந்த கதியில் நடைபெறும் சந்தைப் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பொதுச் சந்தைப் புனரமைப்பு வேலைகள் மந்தகதியில் நடைபெறுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

35 இலட்சரூபா நிதி ஒதுக்கீட்டில் சந்தைப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும், கடந்த இரண்டு மாதங்களாக வேலைகள் நடைபெறவில்லையென்றும் தெரிவித்துள்ளனர்.

(செ-75)

# சங்கேமுழங்கு

## ஏனிந்த புறக்கணிப்பு?

அரியாலைப் பிரதேசத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட காந்தி சனசமூக நிலைய கட்டடத்தின் திறப்பு விழா வைபவம் நிர்வாகத்தினரால் அண்மையில் நடத்தப்பட்டது. அவ்விழாவிற்கு மாநகர முதல்வர், பிரதி முதல்வர் உட்பட கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். வேறு கட்சிகளை சார்ந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களோ அன்றி வேறு எவருமே அழைக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்படி சன சமூக நிலைய கட்டடம் கூட்டணியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து கட்டப்பட்டிருந்தாலும் மாநகர சபை நிதியில் அதாவது மக்கள் நிதியில் இருந்தே ஒதுக்கப்பட்டது. மாநகர சபையினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட அந்நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும், மாநகர சபை உறுப்பினர்கள் பலர் இருந்தும் அவர்களைக்கூட அழைக்காமல் விட்டதன் பின்னணி என்ன?

மேலும் அப்பிரதேசத்தில் குறிப்பிட்ட நிலையத்தின் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து நிகழ்வுகளிற்கும் அனைத்து கட்சிகளும் நிதி, பொருள் உதவிகள் வழங்கி தமது ஆதரவினை வழங்கியிருந்தும் அக்கட்சிகளை சார்ந்த பிரதி நிதிகளையோ, அன்றி அக்கட்சிகளை சார்ந்த மக்கள் பிரதி நிதிகளையோ அழைக்காமல் புறக்கணிக்கப்பட்ட நிகழ்வானது பலர் மனங்களிலும் பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளது மட்டுமல்லாது தமிழர் பண்பாட்டினையே கொச்சைப் படுத்தியுள்ளதாகவே கருதவும் வைத்துள்ளது.

எனவே இதன் பின்னணியில் சில அரசியல் வாதிகளின் ஆலோசனைகள் ஏதும் உள்ளதா அல்லது தவறுதலாக நடைபெற்றதா என்னும் ஐயம் ஏற்பட்டுள்ளது. பொது விழாக்களில் பங்குபற்றுவது, நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் சேவையாளர்களையும் பொது மக்களையும், ஊக்குவித்து மென்மேலும் வளர்ச்சியடையும் விதத்தில் ஆதரவு வழங்கும் நோக்கமாக கருத வேண்டுமே தவிர மாற்றுக் கட்சிகளை விமர்சித்து. அரசியல் பிரசார களயாக மாற்றும் நோக்கத்திற்காகவல்ல, என்பதை சமாதானம், ஐக்கியம் என்பவற்றை உதட்டளவில் உச்சரிப்போர் உணர்ந்து கொள்ள வேண்டும். தமது அரசியல் லாபங்களிற்காக சமூகங்களிடையே சர்ச்சைகளை உருவாக்க முனைவதும் தவறான பிரசாரங்களை மேற்கொள்வதும், விடுதலைக்கும் விடிவிற்கும் வழிவகுக்க மாட்டா.

**சமூக நலன் விரும்பி**

# எழுத்துலகில் தன்னை இறுக்கமாக பிணைத்துக் கொண்டவர் துரையர்

## கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

எழுத்துலகில் தன்னை இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டவர் கவிஞர் துரையர்.

ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் சு. துரைசிங்கம் (கவிஞர் துரையர்) வலி, தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் கௌரவிக்கப்பட்ட போது அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை வலி.கிழக்கு பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

'ஐம்பது நாடுகளை அறியுங்கள், நாற்பத்தாறு நாடுகள், போன்ற இவரது நூல்கள் மாணவ சமூகத்திற்கு மிக்க பயன்உள்ள நூல்களாக விளங்குகின்றன.

'மற்றும் தெரு விளக்கு, ஆடும் மயில், பண்சுமந்த பாடல்', போன்ற நூல்களும், படிப்போருக்கு பயன் விளைவிப்பன.

'அம்மன் கவசம்', 'கவிக்குரல்கள்' போன்ற ஒலி நாடாக்கள் வெளியிட்டமை ஆசிரியரின் அயரா முயற்சியையே வெளிக்காட்டிநிற்கின்றன.

வலி. தெற்கு பிரதேச செயலக ஊழியர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உட்பட பெருமளவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கவிஞர் துரைசிங்கத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் தர்ஷணனின் இசை நிகழ்வும் இடம்பெற்றது. [க]

## புளியங் கூடலில் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் தாய் சேய் நலன் பேணும் நிலையத்தில் அண்மையில சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி இடம் பெற்றது.

இந் நிகழ்ச்சியில் புழு வியாதி, போஷாக்கு குறைபாடு, உளநோய் சம்பந்தமான வீடியோப்படக்காட்சியும் கருத்துரையும் இடம் பெற்றது.

இதே வேளை, அன்றைய தினம் பிற்பகல கரம் பொன் ஞான ஒளி முன்பள்ளியிலும் இதே நிகழ்ச்சிஇடம் பெற்றது. [செ-75]

# நெடுந்தீவில்காலாவதியான பிஸ்கட் வகைகள் அழிப்பு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு மத்தியில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பிஸ்கட் வகைகள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டு சுகாதார பரிசோதகரால் அழிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்படும் படசத்தில், கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நெடுந்தீவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

(செ-75)

# கிணறுகள் துப்புரவுஇல்லை தென்மராட்சி மக்கள் அவதி

தென்மராட்சியில் மக்கள் மீளக் குடியேறாத பகுதிகளில் உள்ள வீடுகளின் கிணறுகள் துப்புரவு இன்றிக் காணப்படுவதால் நீர் அருந்த முடியாத நிலை ஏற்பட்டதாக அப்பகுதிக்குச் சென்றுவரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் 10ம் திகதியிலிருந்து தென்மராட்சியின் சிலபகுதிகளுக்குச் செல்ல இராணுவததினர் அனுமதி வழங்கியதையடுத்து அங்கு செல்லும் மக்களே நீர்அருந்துவதற்கு பெரும் சிரமமுறுவதாக தெரிவிக்கப்படுகிறது. 41

## இராசி பலன்

03/09/2001
(ஆவணி 18 திங்கள்)
பிரதமை வை 5:08 வரை
சதயம் மு.ப 10:48 வரை
ராகுகாலம் 7.35-9.05
நல்லநேரம் 12:05-1 35
சித்தம்

**மேடம்**
பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், கௌரவம், தெய்வதரிசனம்.

**இடபம்**
அதிகாரம், தொழில் நன்மை, சுப நிகழ்ச்சி, முயற்சி ஜெயம்.

**மிதுனம்**
உடல் உழைப்பு, புதிய திட்டம், ஆன்றோர்ஆசி, முயற்சி தாமதம்.

**கடகம்**
பிரயாண பயம், உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், உடல் சோர்வு.

**சிங்கம்**
சுவாரஸ்யம், பிரயாணம், காரிய நன்மை, நண்பர்கள் உதவி.

**கன்னி**
ஆரோக்கியம், காரிய அனுகூலம், தொழில் நன்மை, தனவரவு;

**துலாம்**
திடீர் நன்மை, வியாபார மேன்மை, புத்திரரால் கவலை, கௌரவக் குறைவு.

**விருச்சிகம்**
முயற்சி தாமதம், தன்னம்பிக்கைக் குறைவு. ரோக பயம். தாய் வழிஉறவு.

**தனுசு**
அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை, கூட்டு முயற்சி, வாக்குமேன்மை;

**மகரம்**
மதிப்புக்குறைவு, வாக்கு கலகம், முயற்சி தாமதம், தனவிரயம்.

**கும்பம்**
கற்பனை மிகுதி, ஜனவசியம், நண்பர்கள் உதவி, புதிய முயற்சி.

**மீனம்**
சுப செலவு, காரிய தாமதம், திடீர் நன்மை, மனச்கிலேசம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
-வளவன்

## இலங்கையில் சிறுவர்களுக்கு சுவாசஅழற்சி நோய் கடந்த 10 வருடத்தில் அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கையில் கடந்த பத்து வருடகாலத்தில், சிறுவர்கள் சுவாச அழற்சி நோயினால் பாதிக்கப்படுவது அதிகரித்துள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடவிரிவுரையாளர் எச். டபிள்யூ கொடகம தெரிவித்துள்ளார்.

இந்நோய்க்காளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை 35 வீதமாக அதிகரித்துள்ளது.

சூழல் மாசடைவதாலும் நீர் மாசடைவதாலுமே மக்கள் பலவித சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

விவசாய இரசாயனக் கலவைகள் வேறுவகையான நச்சுப் பொருட்கள் நீர் நிலைகளில் கலப்பதனாலும் நீர் மாசடைகின்றது; இது பிரதானமானதொரு சுகாதாரச் சீர்கேடாகும்;

இலங்கையின் பெரும்பாலான தொழிற்சாலைகள் மக்கள் வாழும் பிரதேசங்களில் இருப்பதால் அங்கிருந்து வெளியேறும் விஷவாயுவினாலும் மக்கள் பாதிப்படைகின்றனர்;

அத்துடன் வாகனங்களில் இருந்து வெளிவிடப்படும் புகையும் மனிதர்களுக்குத் தீங்கை விளைவிக்கின்றது.

எதிர்காலத்தில் நிலத்தின் கீழ் உள்ள நீரில் 'நைத்திரேற்றின்' அளவு கூடுவதால் சிறுவர்களின் உடல் நீல நிறமாகும் நோய் ஏற்படும அபாயம் இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ)

## தமிழ் தம்பதி பதுளையில் கைது

(கொழும்பு)
பதுளை பஸ் நிலையத்தில் தமிழ் தம்பதி ஒன்று சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இத்தம்பதியினர் தமது மகனை பதுளைச் சிறைச்சாலையில் பார்ப்பதற்காக பதுளைக்கு வந்ததாகவும் பதுளைப் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

கொழும்பு புலனாய்வுப் பிரிவு அறிக்கை வந்த பின்னரே இவர்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் என பதுளைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரையும் பதுளைப் பொலிஸார் தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## காதலனின் குடும்பத்திற்கு காதலி அசிட் வீச்சு

காதலன் துரோகமிழைத்ததனால் ஆத்திரமுற்ற இளம் யுவதி காதலன் குடும்பத்தினர் மீது அசிட் வீசியதுடன், தானும் அசிட் அருந்தி தற்கொலை செய்த சம்பவம் கொழும்பு நாலந்தகம கிராமத்தில இடம்பெற்றுள்ளது;

தனது காதலன் ஏற்கனவே மணம் முடித்தவர் என்பதைத் தெரிந்து கொண்டதும், ஆத்திரமுற்ற மேற்படி யுவதி இவ்வாறு அசிட் வீசியுள்ளார்..

எனினும் இச்சம்பவத்தில் இளம் பெண் மாத்திரமே மரணமடைந்துள்ளார். ஏனையோர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ)

## மிதிவெடிகள் 422 மீட்பு

கடந்த மாதம் 24 ஆம்திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான 7 நாட்களில், நுணாவில், கொழும்புத்துறை, அரியாலை, தனங்கிளப்பு மற்றும் கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளில் இருந்து 422 மிதிவெடிகள் மற்றும் 22 கிளைமோர் கண்ணிவெடிகள், 9 டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகள் என்பவற்றை மீட்டெடுத்துள்ளதாக ஊடகத்தகவல்மையம் அறிவித்துள்ளது. (உ)

### பத்திரிகையாளர், தமிழ் அறிஞர்களுக்கு
## அடுத்த மாதம் 1 ஆம் திகதி விருதுவழங்கி கௌரவம்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் மூன்று நாள தமிழ் இலக்கிய விழாவின் நிறைவு நாளான அக்டோபர் முதலாம் திகதி வடக்கு- கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் 13 பேர் மாகாண ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடந்த தமிழ் இலக்கிய விழா அமைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுநர் விருது பெறுபவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் அனுப்பிய பெயர்ப்பட்டியலில் இருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பிரமுகர்களின் பெயர்கள் :-

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி] பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி க குணராசா [செங்கை ஆழியான், செ மற்றாஸ் மயில, திருமதி க. ரதிதேவி, தாமரைச்செல்வி, பொ.மாணிக்கவாசகம், எஸ், பெஞ்சமின், சோ.இராஜேந்திரம் [தாமரைத்தீவான்], அ மு அப்துர் சஹ்ஹார், இரா. நாகலிங்கம் [அன்பு மணி], எம். எம். அகமது லெப்பை [சாந்தி முகைதீன்], கணபதி மானாகன் அண்ணாவியார், எஸ். முத்து மீரான்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் அங்கீகாரத்துக்காக மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுளளது. (உ)

## புதிய காவலரண்கள்

(ஊர்காவற்றுறை)
இராணுவத்தினரால்யாழ். பண்ணைப் பாலத்திற்கருகாமையில் புதியகாவலரண்கள் அமைக்கப் ட்டு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுவருகின்றது.

இதேவேளை பண்ணைச் சந்தியில் பயணிகள் மீதான சோதனையும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது. (க-75)

## விமானங்கள் தாக்குதல்

(கொழும்பு)
கடந்த 30ஆம் திகதி நண்பகல் வேளை சோரன்பற்றில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் நிலைகள் மீதுவிமானப் படையினரின் 2கிபிர்விமானங்கள் துல்லியமாகத் தாக்குதல் நடத்தியதாகவும்,

அன்றைய தினம் நாவற்குழிப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் இரண்டு 81 மி. மீ மோட்டார் குண்டுகளை மீட்டிருப்பதாகவும் ஊடகத்தகவல்மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சிறுமி படுகாயம்

[ஊர்காவற்றுறை]
தண்ணீர் அள்ளும் போது தவறுதலாக கிணற்றுள் விழுந்த சிறுமி தலையில் படுகாயமடைந்த சம்பவம் வேலணைத்துறையூரில் அண்மையில் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [க-75]

## மென்பந்து துடுப்பாட்டம்

(ஊர்காவற்றுறை)
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊழியர்கள் அணிக்கும், யாழ் பிரதேச செயலக ஊழியர்கள் அணிக்கும் இடையே சிநேகபூர்வ மென்பந்து துடுப்பாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது; [செ-75]

## அம்பாறையில் வரட்சியால் பாதிப்புற்றோருக்கு அவுஸ்-உதவி வழங்கும்

(கொழும்பு)
அம்பாறை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

இம் மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு பிரதேச செயலர் மட்டத்தில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன,

இவ்வுதவித் திட்டத்திற்கமைய பல இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கபபடவுள்ளன.

என்றுமில்லாதவாறு இம் மாவட்டம் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுளளமை குறிப்பிடத்தக்கது [செ]

## மகா கும்பாபிஷேகம்

[ஊர்காவற்றுறை]
வேலணை இலந்த வனம் சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 00 மணிக்கு நடைபெறவுளளது. (செ-75)

## படையினர் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில்தவறு

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மாதம் படையினரால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில்தவறுநிகழ்ந்துவிட்டது எனப் படையினரின் தலைமைச் செயலகம் தெரிவித்ததாக சண்டேரைம்ஸ்பத்திரிகை வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுளளது.

தமிழ் மக்களை புலிகளின் அருகிலுள்ள பிரதேசங்களில் இருக்க வேண்டாம் எனவும் இருமாதங்களுக்குத் தேவையான உணவுகளை சேகரித்து வைக்கும்படியும் படையினர் கடந்த மாதம் அறிவித்தமை தெரிந்ததே.

அப் பிரசுரத்தில்இருவாரங்களுக்கு தேவையான உணவை சேகரித்து வையுங்கள் என்றே பிரசுரித்தோம், ஆனால் மட்டக்களப்பில் நிலை கொண்ட படையினரோ இருமாதங்கள் என்று தவறுதலாக அச்சடித்துவிட்டார்கள்.

இதற்கு காரணமானபடை அதிகாரியை இடம்மாற்றிவிட்டோம் என தலைமைச் செயலகம் தெரிவித்தாக அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.( உ-4)

## நோயாளர் கப்பல் சேவை புதனன்று இடம் பெறும்

(கொழும்பு)
திருமலைக்கும் யாழ்ப்பாணத்திறகு மிடையிலான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பல் சேவை வழமை போல் இம் மாதமும் நான்கு தடவைகள் சேவையிலீடுபடவுள்ளது;

இம்மாதத்தின் முதலாவது சேவை எதிர வரும் 5 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் திருமலை பரப்புரை அதிகாரி தெரிவித்துள்ளார்; (செ)

## தமிழ் பெண்கைதிகளுக்கு எதிராக சிங்கள பெண் கைதிகள் தாக்குதல்
### நீர்கொழும்பு சிறைச்சாலையில் சம்பவம்

(கொழும்பு)
தமிழ் பெண்கைதிகளுக்கு எதிரான தாக்குதல் ஒன்று சிங்கள பெண்கைதிகளால் நடத்தப்பட்ட சம்பவம் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்றுளளது.

இச்சம்பவத்தை அடுத்து காயமடைந்த மூன்று தமிழ் பெண் கைதிகள் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டனர்;

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் பெண்கைதிகள் மீதே இத் தாக்குதல் முயற்சி இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் ஈடுபட்ட சம்பந்தப்பட்ட சிங்களப் பெண் கைதிகளுக்குஎதிராகஎந்தவித சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சிறைச்சாலையில் 60 தமிழ் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் குறித்த தகவல் எதுவும் இது வரையில் தெரிவிக்கப்படவில்லை. [க-03]

## ✧ இன்று ஒரு தகவல் ✧

# தோட்டி வெங்கண்ணா

வெங்கண்ணா என்றவுடன் ஏதோ பழைய ராஜா மந்திரி கதைகளில் வரும் தஞ்சையைக் காட்டிக் கொடுத்த வெங்கண்ணா என்று நினைத்து விடாதீர்கள்...! அடியேன் தோட்டி வெங்கண்ணா. பரம ஏழை. தோட்டி வேலை செய்வதற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஒரு தாழ்ந்த குடும்பத்தின் குலவிளக்கு. ஏதோ கொஞ்சம் நஞ்சம படித்திருந்தாலும் குலத்தொழிலை விடாமல் செய்யும் பெரிய அதிர்ஷ்டம் நாட்டில் எங்களைத் தவிர வேறு எந்த இனத்திற்குமே கிடைத்ததில்லை.

என் தந்தையும், பாட்டனும் தோட்டிகள். எனவே, குலாசாரப்படி நானும் தோட்டி! கார்ப்பரேஷனில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். எனவே எனக்கும் அங்குதான் வேலை. நானும என்னைச் சார்ந்தவரும் இல்லையேல் நாட்டில் சுத்தம் இல்லை-சுகாதாரமும் கிடையாது. எந்தத் தொழில் செய்பவரும் தொடர்ந்தாற்போல (லீவு) ஓய்வெடுத்துக் கொள்ளலாம்; மேயர், கமிஷனர், கௌன்சிலர்கள் முதலியவர்கள் சில நாள் வராமல் இருந்தால கூட அவர்கள் வேலைக்கு வராதது மக்களுக்குத் தெரியவராது. ஆனால் நாங்கள் மட்டும் தொடர்ச்சியாக ஒரு நாலு நாள் ஓய்வெடுத்தால் நாடு புழுதிக் காடாகும். எத்திசையும் நாற்றம் தானிருக்கும். தொழிலின் அவசியமும், உயர்வும் தெரிந்து எங்களுக்காகப் பரிந்து பேசுபவர் எவரும் கிடையாது. 'ஏதோ வருகிறார்கள்– வீதியைக் கூட்டுகிறார்கள். வீட்டில் விரும்பத்தகாத இடங்களையெல்லாம் சுத்தம் செய்கிறார்கள் -போகிறார்கள். அது அவர்கள் தலைவிதி அதற்கு எவர் என்ன செய்ய முடியும் என்று சித்தாந்தம், புராண ஆதாரங்களை நீட்டுபவர் தான் நாட்டில் இருக்கிறார்களே தவிர, ஒரு வகுப்பாரே நாட்டில் மிகவும் இழிதொழில் செய்து கொண்டு பரம்பரை பரம்பரையாக ஏன் இருக்கவேண்டுமென்று கேட்கும் கண்ணியம் படைத்தவர்கள் எங்கோ ஒரு சிலர் தானிருக்கிறார்கள். எனக்குக் கார்ப்பரேஷனில் ஏதோ சம்பளம் தருகிறார்கள். காலை, மாலை இருவேளை கட்டாய வேலை. ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு நாள் விடுமுறை. அவ்வளவு தான். மற்றும் படி நாங்கள் நடத்தப்படுவதைப் பற்றி மட்டும் கேட்க வேண்டாம்; அதெல்லாம் பெரிய கதை. நாங்கள் செய்வது வெறும் கூலிக்கு வேலை செய்வது மாத்திரமல்ல. ஒருசிறந்த பொதுசன சேவையே ஆகும். □

வெங்கண்ணா

# பதவிகளை பாதுகாப்பதிலேயே
# பெரும்பான்மைக்கட்சிகள் தீவிரம்

### அமைச்சர் கதிர்காமருக்கு சந்திரசேகரன் எம்.பி. கடிதம்

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கவும், ஜே.வி.பியும் சேர்ந்து இனப்பிரச்சினையையும், யுத்தத்தையும் உதாசீனப் படுத்திவிட்டு பதவிகளைப் பற்றியும் பாராளுமன்ற ஆயுட்காலத்தைப்பற்றியும் மட்டும் தான் அக்கறை காட்டியது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு சந்திரசேகரன் எம்.பி அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு தயாரென்று தாங்கள் அறிவித்திருப்பது சர்வதேச ஆதரவினைப் பெற்றுக் கொளவதற்காக தங்களின் அரசு இறுதியாககையாள்கின்ற அரசியல் தந்திரமாகவே நாம் கருத வேண்டியுள்ளது.

நான்கு மாதங்களுக்கு மேலாக விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தம் செய்திருந்த போது 'அரசாங்கம் யுத்த நிறுத்தத்திற்கு தயாரில்லை' எனற தங்கள் அரசாங்கத்தின் நிலைப்பாடு தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் கதவுகளை மூடுவதற்கு காரணமாக இருந்தது.

தற்போது உங்களுடைய அரசாங்கத்தின் ஆயுடகாலம் நாட்கணக்கில் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கிறது.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கானவாய்ப்புகள் இருந்த நேரங்களில் உங்கள அரசு யுத்தத்தை தீவிரப்படுத்துவதில் ஆர்வம் காட்டியது. சமாதானத்திற்காக இங்கு வந்த நோர்வே நாட்டின் நல்லெண்ணத்தையும் சிதைத்தது ஐக்கிய தேசியக் கட்சியோடு அரசு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததை பற்றி ஆதங்கப்படும் தாங்கள் ஜே.வி.பியுடனோ அல்லது ஐ.தே.கவுடனோ பேசும் போது இனப்பிரச்சினை தொடர்பாகவோ அல்லது யுத்தம் தொடர்பாகவோ அவர்களிடம் எந்தவிதமான நிலைப்பாட்டையும் பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைககவில்லை.

இறக்கும் தறுவாயில் இந்த அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காகத் தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொச்சைப் படுத்தும் விடயத்தில் தயவு செய்து இனி நீங்கள் மௌனமாக இருப்பதே தமிழர்களுக்காக செய்யும் ஒரே ஒரு மிகப் பெரும் சேவையாகும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (க-3)

## கால்நடை
### வளர்ப்போருக்கான
## கருத்தரங்கு

(புலோலி)

வல்லிபுரபபிரதேசவிவசாயிகள், கால்நடை வளர்ப்போருக்கான கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும் வல்லிபுரம் கிராமசேவையாளர் அலுவலகத்தில் இன்று நடைபெறவுள்ளன;

கால்நடை வளர்ப்போருக்கான கருத்தரங்கை பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். வசீகரனும தென்னைப் பயிர்ச்செய்கை பற்றிய கருத்தரங்கை தென்னை ஆராய்ச்சிச் சபை உத்தியோகத்தர் எஸ் சத்தியேந்திராவும் விவசாயக் கருத்தரங்கை புலோலிவிவசாயப் போதனாசிரியரும் நடத்துவார்கள். இதற்கான நடவடிக்கைகளை வல்லிபுரம் கிராம சேவை உத்தியோகத்தர் என். குமரகுருநாதன் மேற்கொண்டிருக்கிறார். (செ- 52)

## சைவப்பிரசங்க
## பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய சைவப் பிரசங்க பூர்த்திவிழா இன்று பிப 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரசங்க பூஷணம ந. சிவசண்முக மூர்த்தி ''காரைக்கால் அம்மையார்'' என்னும் தலைப்பில் சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

தொடர்ந்து பிரசங்க பூஷணத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தலும், ஆசியுரை, பாராட்டுரைகள் ஆகியனவும் இடம் பெறும். (செ)

## நெடுந்தீவில்
### சாகித்தியவிழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சாகித்தியவிழா நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்றலில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந மதனராஜா பிரதம விருந்தினராகக்கலந்துகொள்கிறார்.

இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளாக, 'மங்கையர்மாண்பு' என்னும் தலைப்பில் வில்லிசையும், 'நம்மவர் வெளிநாடு செல்வது எமது சமூகத்தை சீரழிக்கின்றது- சீர்ப்படுத்துகின்றது' என்னும் தலைப்பில் பட்டிமன்றமும, 'காத்தவராயன் சிந்துநடைக் கூத்தும் நடைபெறவுள்ளன. (செ)

## இராஜகோபுர
## கும்பாபிஷேகம்

[இணுவில்]

சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலய இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது. [செ-49]

# சமாதானம் வேண்டி
# விசேட அனுட்டானங்கள்

(மட்டக்களப்பு)

நாட்டில் நிரந்தர சமாதானமும் சுபீட்சமும் வேண்டியும இனங்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டியும மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கடந்த வெள்ளிக் கிழமை சர்வமத அனுட்டானங்கள் இடம் பெற்றன.

மட்டக்களப்பு, கல்லாறு, வாழைச்சேனை ஆகிய இடங்களிலும இந்துக் கோயில்கள் மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட வழிபாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதேவேளை காத்தான் குடி, ஏறாவூர், மீராவோடை, ஓட்டமாவடி ஆகியபிரதேசப் பள்ளி வாசல்களில் பிரார்த்தனைகள் இடம் பெற்றன.

இந் நிகழ்வுகளில் மத வேறுபாடின்றி பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான அலிசாஹிர் மௌலானா மேற்கொண்டார். (க-04)

# ஒய்வூதியர் நலன்புரிச்சங்க
# ஊக்குவிப்பு பரிசுத் திட்டம்
## ஐவர் தெரிவு

[யாழ்ப்பாணம]

வடமாகாண ஒய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் ஊக்குவிப்புப் பரிசுத் திட்டதின் கீழ் 1999ஆம ஆண்டு நடத்தப்பட்ட ஆண்டு 5 புலமைப் பரிசில், க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் பரிசு பெறுவதற்கு ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**தரம் 5 புலமைப் பரிசில்**

லிஜா சுந்தரலிங்கம் சோ. சுந்தரலிங்கம்-இலங்கை வங்கி யாழ்ப்பாணம்

**க. பொ. த. சாதாரணம்**

பிரசாந்தி பாலேந்திரா து. பாலேந்திரா-மக்கள் வங்கி யா/ஸ்ரான்லி வீதி

சிவநாயனி நாகேந்திரன் து. நாகேந்திரன்-இலங்கை வங்கி யா/மேற்றரக் கிளை

தர்ஷிகா சிவலிங்கம் திருமதி கலா சிவலிங்கம்-மக்கள் வங்கி வவுனியா

**க. பொ. த. சாதாரண தரம்**

குமணன் இராசநாயகம் பொ. இராசநாயகம்-மக்கள் வங்கி யாழ் பிரதேச செயலகம்

ஆகியோரே பரிசுக்குத் தெரிவாகியுள்ளனர். (உ)

## வடமராட்சியில்
# ஆங்கில மொழி மூலவள
# பயிற்சி நிலையம் ஆரம்பம்

[புலோலி]

வடமராட்சி வலயக்கல்விப் பிரிவுக்கான ஆங்கில மொழி மூலவளபயிற்சிநிலையம் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது இந்த ஆங்கில மொழிமூலவளப்பயிற்சிநிலையம் வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கு ஆதாரமாகச் செயற்படுவதோடு பேச்சு ஆங்கில மொழிக்கான பயிற்சி வகுப்புக்களையும் ஆரம்பிக்க இருக்கின்றது.

முதல் கட்டமாக பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற மாணவர்களுக்கான பயிற்சி நெறியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறியும் பாடசாலைகளில் ஆங்கிலத்தைக் கற்பிக்கும் வேறுபாட ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தலா 20 பேர் வீதம் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா தெரிவித்தார். (செ-52)

# குளவி கொட்டிய
# இருவர் வைத்தியசாலையில்

கொக்குவில் கிழக்குப் பகுதியில் அண்மையில் கூட்டில் இருந்து கலைந்த குளவிகள் கொட்டியதில் காயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்;

கொக்குவில் கிழக்கு ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த எஸ். வசந்தாதேவி, அவரது மகளான எஸ். கிசாங்கி (வயது 7) ஆகிய இருவருமே குளவி கொட்டியதில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-104)

## யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி
## பிரபாகரன் பிறந்த மண்ணில்
# குடியிருக்க விருப்பம்

(வடமராட்சி கிழககு)

மானமும் ரோசமும மிக்க விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பிறந்து வளர்ந்த மண்ணில் குடியிருக்க விரும்புவதாக யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வல்வெட்டித் துறை மாவட்ட வைத்திய அதிகாரி மயில் ஏறும் பெருமாள் தெரிவிக்கையில்;

வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு வந்த யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி, புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்து வளர்ந்த வீட்டைக் காட்டுமாறு தன்னைக் கேட்டதாகவும,

தான் கூட்டிச் சென்று காட்டியபோது உணர்ச்சிவசப்பட்ட நிலையில் மானம் மிக்க வீரமறவர்கள் வாழும் இப் பூமியில் தன் வாழ் நாளைக கழிக்க விரும்புவதாகவும் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார். (உ-43-5)

## திருமலை-யாழ்
# கப்பல் சேவையை
# அதிகரிக்க முடியாத நிலை
### செஞ்சிலுவை அதிகாரி தகவல்

(கொழும்பு)

திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் பயணிகள் கப்பல் சேவையை அதிகரிக்க முடியாத நிலையிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்;

கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்குவதற்கு ஆளணிப்பற்றாக்குறை காரணமாகவே சேவையை அதிகரிக்க முடியாதுள்ளது.

யாழ்ப்பாணம் வருவதற்குகாகவும் திருமலை செல்வதற்காகவும் 8 ஆயிரம் பயணிகள் கப்பல் சேவையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இதேவேளை, கப்பல் சேவையை அதிகரிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச

# இந்திய அமைச்சரவை மேலும் விஸ்தரிப்பு

## பிரதமர்வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் மத்திய அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. புதிய அமைச்சர்கள் இரண்டு பேருக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்கிறது. 5 அமைச்சர்கள் விலக்கப்பட்டுள்ளதோடு சில அமைச்சர்களுக்கு இலாகாப் பொறுப்புக்கள் மாற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாய் மாற்றியமைக்கப்பட்ட அமைச்சரவை பற்றிய விபரங்களை வெளியிட்டார் அதன் படி.

கபினட் அந்தஸ்து கொண்ட இரண்டு அமைச்சர்களும் இணை அமைச்சர்களாக 4 அமைச்சர்களும் மந்திரி சபையில் சேர்க்கபபட்டிருக்கிறார்கள்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் புதிய அமைச்சர்கள் பதவியேற்றதன் பின் செய்தியாளர் மத்தியில் பிரதமர் வாஜ்பாய் உரை நிகழ்த்துகையில்; கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமது அமைச்சரவை சகாக்களின் செயற்பாட்டை ஆராய்ந்த பிறகுதான்அமைச்சரவையை அமுலாக்கம் செய்ததென்றும்சொன்னார்

உலக தரிசனம்

இளைய தலைமுறையினருககு சந்தர்ப்பம் வழங்கும் முகமாக மந்திரி சபையில் விரிவாக்கம் செய்ததாகவும் கூறினார்

தமது கூட்டணி அமைச்சரவையில் பாட்டாளி மக்கள் கட்சிக்கும் திருநாமல் காங்கிரஸிற்கும் இடம் கொடுக்க முடியாதென்று அவர் மேலும் தெரிவித்தார். (து)

# கிறிஸ்மஸ்தீவுக் கடலில் கப்பலில் தங்கியுள்ளோருக்கு

# கடும்தொற்று நோய் பரவியது

(கொழும்பு)

அகதிகளாக அவுஸ்திரேலியா செல்லும் முயற்சியில் 'கிறிஸ்மஸ் தீவு' சென்றும் 'தம்பா' என்ற நோர்வேயின் சரக்குக்கப்பலிலிருந்து இறங்க முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கும் 438 பேரும் பெரும் தொற்றுநோய்களுக்குஉள்ளாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அவுஸ்திரேலியப் பிரிவு தெரிவிக்கையில்; அவர்களுக்கு வயிற்றோட்டம் போன்ற நோய் தோன்றியுள்ளதாகவும், கிறிஸ்மஸ் தீவில் இறங்க முடியாதபடி தடைவிதிக்கப்பட்டிருப்பதால் வேறு எங்காவது அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய இடங்களுக்கு கப்பல் திருப்பிவிடப்படலாம் என்றும் தெரிவித்தது.

அவுஸ்திரேலியாவும், இந்தோனேசியாவும் கப்பலை ஏற்கமறுத்து விட்டன. இந்த அகதிகளுள் சிறுவர்களும், கர்ப்பிணித்தாய்மாரும் அடங்கியுள்ளனர். அவுஸ்திரேலிய இராணுவம் கப்பல் நங்கூரமிடவிடாது தடுத்து வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

# அயோத்திப் பிரச்சினைக்கு கல்வெட்டுமூலம் தீர்வு

## சாத்தியம் என்கின்றனர் நிபுணர்கள்

[புதுடில்லி]

அயோத்தியில் கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டின் மூலம், ஆலயம், பள்ளிவாசல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அயோத்தியில் இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்ட இக் கல்வெட்டு 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும், இதில் முப்பது பாக்களைக் கொண்ட இருபதுவரிகள் உண்டென்றும் இவர்கள் கூறுகின்றனர்.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி அழிக்கப்பட்ட சுவர் இடிபாடுகளின் கீழேயே இக்கல் வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

12 ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன்னர் அயோத்தியில் இராமர் ஆலயம் இருந்ததற்கான சான்றை இது வழங்கமுடியும் எனவும் நிபுணர்கள் நம்புகின்றனர். (செ)

# இந்திய கோதுமையை வாங்குவதில்சிக்கல் இல்லை

## ஈராக் அமைச்சர் தெரிவிப்பு

[பாக்தாத்]

இந்திய கோதுமையை வாங்குவதில் எந்தவிதசிக்கலுமில்லை இந்திய கோதுமை சுத்தமாக இருந்து அது பொதி செய்யப்படுமாயின் ஈராக் வாங்கும் என்று அந்நாட்டு வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியக் குழுவிற்கு தலைமைதாங்கி ஈராக் சென்றுள்ள நஜிமாகப்துல்லா ஈராக் வர்த்தக அமைச்சர் மெகமட் சாலேலியுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போது மேற்கண்ட கருத்து பரிமாறப்பட்டது

பிரதமர் வாஜ்பாயின் செய்தியை ஈராக்கின் அதிபர் சதாம ஹூசைனிடம் கையளித்த பின் அந்நாட்டு நிதி. அமைச்சர் பெற்றோலிய அமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர்களையும் குழுத் தலைவர் நஜிமாகப்துல்லா சந்தித்து உரையாடினார்.

இந்தியாவிற்கும் ஈராக்கிற்குமிடையேஎண்ணெய்மற்றும் உணவுப் பொருட்களுக்கான இருகரப்பு வர்த்தகம் பற்றிப் பேசப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

# இறப்பிலும் இணைந்த பாசமுள்ள சதிபதி

(சென்னை)

இறப்பிலும் இணைபிரியாத பாசமுள்ள தம்பதியரை ஒரே பாடையில் எடுத்துச் சென்று தீமூட்டிய சம்பவம்தமிழ்நாடு குடந்தையில் இடம்பெற்றது

இத் தம்பதியரின் இறுதி மூச்சு நிற்கும்பொழுதுவந்தே மாதரம் என்ற கோஷத்தை சொல்லிய படியே உயிர் நீத்தனர்.

பழம் பெரும் சுதந்திரப் போராட்ட தியாகியானமாரிமுத்து (வயது79) இறந்த சில நிமிடத்தில் அவரது மனைவியான முத்துலெட்சுமி (வயது 70) என்பவரும் உயிர் நீத்தமை குறித்து இத்தம்பதியரின் அன்பை எண்ணிய அவ்வூர் மக்கள் வியப்படைந்துள்ளனர்; (செ)

## புதிய கட்டடம் நிர்மாணம்

(புலோலி)

நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை பங்குத்தந்தை அருட்திரு. எம். ஏ. லூடொன்பேட் அடிகளார் நாட்டி வைத்தார். இந்த அடிக்கல் நாட்டும்விழா விலே மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் எஸ் சுதிர்காமத்தம்பி, கடற்றொழில்பரிசோதகர் வி லிஸ்ரன் நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தலைவர்பீ அமிர்தநாதர் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர். (செ- 52)

# இறந்தவர்களுக்குஅஞ்சலி செய்யும் விசித்திரஆடுகள்

(சென்னை)

இறந்தவர்களுக்கு மனிதர்கள் அஞ்சலி செலுத்துவது போன்று ஆடுகளும் அஞ்சலி செலுத்தும் விசித்திர நிகழ்வு தமிழ்நாடு மைசூர் நகரில் இடம் பெறுகிறது

மைசூர் அருகே உள்ள நாகனஹள்ளி என்ற கிராமத்தில் உள்ள இரண்டு ஆடுகள், இக் கிராமத்தில் யாராவது இறந்து விட்டால் அவர்களின் இறுதி யாத்திரையில் பிணத்துக்கு முன்னே சுடுகாடு வரை செல்லுகின்றன.

அத்துடன் அன்று முழுவதும் உணவு எதுவும் உண்ணாமல் உண்ணாவிரதம் இருக்கின்றனவாம். (செ)

# அ. இ. அ. தி. மு.க கூட்டு அறவே கிடையாது

## பி. ஜே. பி. தமிழக செயலர் தெரிவிப்பு

(சென்னை)

அ இ அ. தி. மு. க வை மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பே இல்லை என்று இல. கணேஷன் தெரிவித்தார்

பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழக செயலர் இல. கணேஷன் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்;

அ இ. அ தி. மு. க குறிப்பாக செல்வி ஜெயலலிதா கடைப்பிடித்த நடை முறைகளை எமது தொண்டர்களும் ஆதரவாளர்களும் இலேசில மறந்து விடமாட்டார்கள் என்றும் தமது அணியில் மீண்டும் சேர்வதையோ சேர்த்துக்கொள்வதையோ விரும்பமாட்டார்களென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை தி. மு க கருணாநிதியுடன் அறிக்கைகள் விடும் போரில் தி மு க. பா ஜ க. கூட்டு உடைந்துடன் தன்னை பிரதமர்வாஜ்பாய் ஒத்துழைக்கும் படி அழைப்பார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். [து]

# கிழக்குத் தீமோர் பொதுத் தேர்தல் ஐ.நா. செயலர் பாராட்டு

(தீமோர்)

கிழக்குத் தீமோரில் நடந்த பொதுத் தேர்தல் குறித்துஐக்கிய நாடுகள் சபை செயலர் கொபிஅனன் பாராட்டுத் தெரிவித்தார்.

தேர்தல்பற்றிச்செய்தியாளர்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்; இது உலகசமுதாயத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு என்றும் அடுத்து வரும் சில மாதங்களுக்கு ஐக்கிய நாடுகளின் மேற் பார்வை தேவை என்றும்தெரிவித்தார்.

இததேர்தலில்ஒழுங்கக்கேடுகள் இடம் பெற்றாலும் 93 வீதவாக்காளர்களவாக்களித்துள்ளனர்என்பதுஇங்கு குறிப்பிடத்தக்கது [து]

# நாட்டின் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்

## பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகச் சில முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டியிருப்பதாகப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

நாட்டிலே பெருகி வரும் பொது செலவினங்களைக் குறைத்தல், அரச தனியார் துறைகளில் மலிந்து வரும் ஊழல்களைஅகற்றுதல், நீதித்துறைக் குறைபாடுகளை அகற்றுதல் போன்றவற்றில முக்கியநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிததார்.

இந்த வேளை நாட்டின் வளர்ச்சி 8வீதம் கூடவில்லையென்றால் நாட்டின் பொருளாதாரம் மிகமோசமடையுமென்று இந்தியாவின் பொருளாதார நிபுணர்அறிவித்ததையடுத்தே பிரதமர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். (து)

# சிங்கப்பூர் அமைச்சர் மலேசியா பயணம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரின் மூத்த அமைச்சர் லீக்குவான்யு நேற்று மலேசியா சென்றுள்ளார்.

நான்கு நள் பயணம் மேற்கொண்ட இவருடன் துணை அமைச்சர்கள இருவரும் மலேசியா பயணமாகியுள்ளனர்.

அங்கு மலேசிய பிரதமர் முகர்தீன்முகமமது, உதவிப்பிரதமர் கடாபி மற்றும் அதிகாரிகளையும்சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவர்.

பேச்சு வார்த்தைகளின் போது நீண்ட நாட்களாகச் சிங்கப்பூருக்கும் மலேசியாவிற்கும் இடையே தீர்க்கப்படாத பிரச்சினை பற்றி பேசுவர்.

மலேசியத்துணைப் பிரதமர் அப்துல்லா கடாபி இவ்வாண்டு முற்பகுதியில் சிங்கப்பூர் சென்றதை அடுத்தே சிங்கப்பூர் மூத்த அமைச்சரும் மற்றும் அமைச்சர்களும் மலேசியா செலகிறார்கள். (து)

# இந்திய-பாகிஸ்தான் வர்த்தகம் மேம்பாடு

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் இடம் பெறவுள்ள பேச்சுவார்த்தையை உறுதிப்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கும முகமாக இந்தியா இஸ்லாமாபாத்துடனான வர்ததகத்தைமேம்படுததியுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இந்தியா இறக்குமதி செய்யும 50 க்கு மேற்பட்ட பொருட்களுக்கான வரிவிலக்கினைப் புதுடில்லி அறிவித்துள்ளது.

உலர்ந்த பழங்கள், முட்டை புத்தகங்கள், செய்தித்தாள்கள், மரப்பொருட்கள ஆகியன இவற்றில் அடங்கும் என்று வர்த்தக அமைச்சகம்தெரிவித்துள்ளது.

இதேவேளை புதுடில்லியிலிருந்து மாருதி நிறுவனத் தலைவரை உள்ளடக்கிய வர்த்தகக்குழுவொன்று இஸ்லாமாபாத்துக்குச் சென்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (து)

# எயிட்ஸ் நோய் தாக்கம் தாய்லாந்தில் அதிகம்

(பாங்கொக்)

எயிட்ஸ் நோயால் இறந்தவர்களின் தொகை தாய்லாந்து நாட்டிலேயே அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக நாடுகளோடு ஒப்பிடும் போது இது வரை தாய்லாந்தில்எயிட்ஸினால் இறந்தவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதாகவும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் அந்த நாட்டுப் பிரதமர் தெரிவித்தார்;

தாய்லாந்தில் விபசாரத்தில் ஈடுபட சட்டம் அனுமதித்திருப்பதாலேயே எயிட்ஸ் நோயால் இறப்பவர்கள் தொகை கூடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

மனநலம் நன்குடையார்
ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் [பு] டைத்து
- குறள்

# வலம்புரி

## வீதிகளில் ஆக்கிரமிப்பு

சமகாலத்து இளைஞர்களின் போக்கு பெரியவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது. முன்பெல்லாம் எந்தக்கருமங்களையும் பெரியவர்களின் ஆசியுடன் செய்வதும், அவர்களுக்கு மதிப்பளிப்பதும் வழக்கத்திலிருந்தது. ஆனால் இப்போது அவையெல்லாம் மலையேறிவிட்டது.

பெரியவர்களின் சொல்லுக்கு மதிப்பேயில்லை. இதனால் எமது சமூகத்தின் கலாசார அமைப்புகள் சிதைவடைந்து விட்டதுஇளைஞர்கள், யுவதிகளின் மனோ நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதை வீதிகளில் அவர்கள் சைக்கிளில் செல்லும் ஒழுங்கிலிருந்து அறியமுடியும். நான்கைந்து பேர் ஒன்றாக வீதியை ஆக்கிரமித்துச் செல்லும் அந்தக் காட்சி, வீதியென்பது பொதுச் சொத்து, அதனைப் பயன்படுத்தும் உரிமை எல்லோருக்குமுண்டு என்பதை உணராத நிலையைத் தெளிவுபடுத்துகிறது.

பொதுச்சொத்து மற்றவர்களின் நுகர்வுக்கும் உரியதென்பதை உணராமல் ஒரு சமூகம் உருவாகுமாயின் அதுவே எதிர்கால சமூகத்தின் ஆரோக்கியமற்ற தன்மையின் அறிகுறியாகும். வீதிகளை ஆக்கிரமித்துச் செல்வதில் இளைஞர்களுக்கு நிகராக யுவதிகளும் பங்காற்றுகின்றனர். தம்மை மறந்த நிலையில் நடந்து கொள்கின்றனர்.

இதனால், வீதியில் செல்லும் வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் எனப்பலரும் பாதிப்படைகின்றனர். சிலவேளைகளில் வீதியில் ஏன் இப்படிச் செல்கிறீர்கள் எனக் கேட்டால் அவ்வளவுதான் தகாத வார்த்தைப் பிரயோகம் கராத்தே எடுப்புகள், ஏன் சிலவேளைகளில் கேள்விகேட்டவரின் வீட்டிற்குச் சென்று அட்டகாசம் விடுதல் இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்தேறிவிடும் இதனால் ஏதோ பொறுமையைக் கடைப்பிடித்துக் கொண்டு இளைஞர்கள் யுவதிகளின் அசட்டைத் தனமான செயற்பாடுகளை ஜீரணிக்க வேண்டியுள்ளது.

இளைஞர்கள், யுவதிகளின் இத்தகைய போக்குகளை நெறிப்படுத்துவதில் பாடசாலைகள் பெரும் பங்காற்றவேண்டும்.

என்பதுடன் பெற்றோர்களும் தம் பிள்ளைகளின் ஒழுக்கச் செயற்பாடுகளில் கண்ணும் கருத்துமாக இருப்பது அவசியமாகும்.

# 22ம் நூற்றாண்டில் தமிழ் நிலைத்து நிற்குமா?

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் தற்போது கனடாவின் ரொரன்ரோ மாவட்ட கல்விச்சபையில் பல்கலாசார ஆலோசகராக கடமையாற்றும் சமூகவியல், உளவியல், இலக்கியம், கல்வியியல் போன்ற துறைகளின் கட்டுரையாளருமான பொ. கனகசபாபதி அருணோதயம் பூச்சொரியும் பொன்னொச்சி மரத்தில் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது

[ஆ-ர்]

எத்தனை நாளைக்குத் தான்பொய்பேசுவது? இங்கேயாவது உண்மையைப் பேசுவோமே. கவிதைக்குத்தான் பொய் அழகு கவிஞனுக்குமா அது அழகு? இல்லை. இந்த நூற்றாண்டில் இருநூறு மொழிகள் அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன: தமிழுக்கும் இந்நிலை ஏற்படுமோ என்னும் அச்சம் வளர்ந்து வருகிறது.

வாழ்க்கைக்கு உதவாத மொழிதான் காலப்போக்கில் அழிந்து போகிறது. அப்படி அழியாதிருக்க காலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் வகையில் கணனியில் தமிழ் புகுத்தப்பட்டிருக்கிறது எனக் 'கவிப்பேரரசு' வைரமுத்து அண்மையில் பேசியதாக ஆனந்த விகடனில் வந்திருந்தது. உரையின் முற்பகுதி ஏற்கப்பட வேண்டியது. பிற்பகுதி சர்ச்சைக்குரியது. கணனியில் தமிழ் புகுத்தப்படுவதால் மாத்திரம் அது அழிவிலிருந்து காப்பாற்றப் படுமென்பது அதீதமான கற்பனை என்றே கருதலாம்.

கல்வி என்பது அறிவுவளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று சொன்னாலும் கூட அது தொழில் சார்ந்ததாக அமையும் அல்லது பண்பாடு சார்ந்ததாக அமையும். கல்வி வழங்குவதற்கு மொழி அவசியம். அது பொதுவாக வாய்மொழியாக அமையும். சில சமயங்களில் உடற்கூறுமொழியாகும். மொழி ஓர் ஊடகம். எனவே எமது எண்ணங்களை எடுத்தியம்ப அது தேவையாகிறது: இன்றைய தொழில் நுட்ப விஞ்ஞான விருத்தி பரந்த உலகினை ஒரு சிறு பூகோளக் கிராமமாக்கி விட்டது. தொலைபேசி பல்லாயிரம் மைல்களுக்கப்பால் உள்ளவரை நெருங்க வைத்து விட்டது என்றால், இணையம் (Internet அவரை அண்டை வீட்டுக்காரர் ஆக்கிவிட்டது. இணையத்தை ஒரு அட்சய பாத்திரம் என்போமா? அமுத சுரபி என்போமா? அது கேட்டது எல்லாவற்றையும் தேவைக்கு மேலாகவே தந்து விடும் தன்மை வாய்ந்தது. இதற்குத் தேவையானது ஒரு கணனி. இணைய இணைப்பு சுட்டி அல்லது சுண்டெலி (Mouse போகிறபோக்கைப் பார்த்தால் ஒவ்வொரு வீட்டிலும் ஆளாளுக்கு ஒரு கணனி மி விரைவில் வந்து விடும். இப்போ செல்லிடபேசி (Cell Phone) மாதிரி விரைவில் கணனியும் காடு மேடெல்லாம் நம்மோடு ஒட்டி உறவாடியபடி உலாவரும். ஆனால், அலிபாபா 'Open Sessame'' என்றதும் தான் குகைக் கதவு திறக்கும் அட்சய பாத்திரம் அல்லல்படுவோருக்கு உணவு படைக்கும். ஆனால் அதனோடு உறவாட மணிமேகலையால் தான் முடியும். மணிமேகலைக்குமணிமேகலா தெய்வம் என்ன சொல்லியது:

சிறந்த கொள்கைச்
சேயிழை கேளாய்
மக்கள் யாக்கை
உணவின் பிண்டம்
இப் பெருமந்திரம் இரும்
பசி அறுக்கும் என்று
ஆங்கது கொடுத்து
அந்தரம் எழுந்து
நீங்கிய தாங்கு
நெடுந் தெய்வம்.

ஆம் இணையம் எனும் அட்சய பாத்திரம் அறிவுப் பசியை அறுக்கும் எனினும் அதற்கு வேண்டியது சடங்களை அல்லது பெருமந்திரம் அதுதரும் தகவல் முழுவதுமே ஆங்கிலத்திலேயே இருக்கும். அறிவு வளர்ச்சியோ அபரிமித வேகத்தில் செல்கிறது எனவே இன்றைய தகவல்கள் நாளைய பழைய செய்திகள் ஆகிவிடப் புதிய தகவல்கள் மிளிர்கின்றன எனவே உலகஅரங்கிலே ஆங்கிலத்தின் ஆக்ரமிப்பை எதிர்கொள்ள இன்னொரு மொழி இருத்தல் சாத்தியமில்லை என்பதே உண்மை: எனவே சென்ற நூற்றாண்டின் வடமொழிக்கும், இலத்தீனுக்கும் ஏற்பட்ட கதி இந்த நூற்றாண்டில் தமிழுக்கும் நேரமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? கணனியில் தமிழ் புகுத்தப்பட்டிருப்பதால் தமிழ் அழிவிலிருந்து காப்பாற்றப்படும் என்ற கவிப்பேரரசுவின் வாதம், காதால் கேட்க இதமாக இருக்கிறதே அன்றி யதார்த்தமானதாக இல்லை என்பதை மனவருத்தத்துடன் ஏற்கவேவேண்டும். கணனியில் தமிழ் புகுந்தால் மட்டும் போதுமா? அறிவியல் தொழில் நுட்பவியல் மருத்துவம் சம்பந்தமான அறிவு விருத்தியின் வேகத்திற்கு ஆங்கிலம் போல் தமிழும் ஈடு கொடுத்து எடுத்துக் கூறமுடியுமா? பாரதி அன்றேசொல்லி விட்டான்.

புத்தம் புதிய
கலைகள்-பஞ்ச
பூதச் செயல்களின்
நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது
மேற்கே-அந்த
மேன்மைக் கலைகள்
தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவதில்லை
-அவை
சொல்லுந் திறமை தமிழ்
மொழிக்கில்லை
மெல்லத் தமிழ் இனிச்
சாகும்-அந்த
மேற்கு மொழிகள்
புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை
உரைத்தான்-ஆ!
இந்த வசை
எனக் கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத்
திக்கும்-கலைச்
செல்வங்கள் யாவுங்
கொணர்த் திங்கு
சேர்ப்பீர்!

பாரதியின் ஆதங்கம் இணைய யுகத்திற்கு முந்தியது. உலக அரங்கிலே இன்றைய அளவு ஆக்கிரமிப்பை ஆங்கிலம் கொள்ளாதிருந்த காலத்திற்குரியது. கொன்றிடல் போலொரு வார்த்தை கூறத் தகாதவன் கூறினான். காண்பீர் என்றுகுமுறுகிறான் பாரதி. கூறியவன் மிலேச்சனாய் இருக்கலாம். கூற்று உண்மை செறிந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழுக்கு மாத்திரமல்ல இன்னும் பல மொழிகளுக்கும் இதே நிலை தான். என்பதே உண்மை: பொருளாதார விருத்தியடைந்த நாடுகளாகிய G7 நாடுகள் ஏழில் மூன்று ஆங்கிலம் கோலோச்சும் நாடுகள். ஏனைய ஜப்பான், ஜெர்மனியில் ஆங்கிலம் கட்டாய பாடம். மற்றைய நான்கில் வெவ்வேறு மொழிகள் பேசப்பட்டாலும் கூடஅவை பொருளாதார விருத்தியுற்றமையால் ஆங்கிலத்துக்கு ஈடு கொடுக்க முடியும்: எனினும் அந்த நாடுகளில்ஆங்கிலம் கட்டாய இரண்டாவது பாடமாகப் போதிக்கப்படுகிறது: அதே போன்று மக்கள் தொகை காரணமாக சீன மொழியும் ஓரளவு ஈடு கொடுக்க முடியும்என எண்ண இடமுண்டு. ஆனால் தமிழ்? 20ஆம் நூற்றாண்டிலே தமிழ் பேசாத தமிழர் தொகை கணிசமான அளவிலே அதிகரித்துள்ளது. இவர்கள் எல்லாம் தொழில்தேடி ஆபிரிக்க, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் ஏன் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் சென்றவர்களின் வாரிசுகளே. இவர்கள் தொழில் பெறுவதற்குத்தமிழ் மொழிக் கல்வி உதவவும் இல்லை இவர்களும் தமிழை தெரிந்து வைத்திருக்க முயற்சியும் எடுக்கவில்லை. மலேசியாத் தமிழர்களும் சிங்கப்பூர்த் தமிழர்களும் சிறிது வித்தியாசமானவர்கள்? மூன்று நான்கு தலைமுறை தாக்குப் பிடித்து விட்டார்கள் அரசாங்கமும் ஒத்துழைப்பு நல்கியதால் அங்கு இதுவரைதமிழ் காப்பாற்றப்பட்டது: ஆனால் அங்கேயும் இன்றைய இளைய தலைமுறையினர் பலர் தமிழ் பேசுகின்றார்களே அன்றி எழுத வாசிக்கத் தெரியாதவர்களாகவே உள்ளனர்.

தமிழ் நாட்டிலே ஆறு கோடி தமிழர்கள் உள்ளனர் ஆனால் உயர் மட்டத் தமிழர்களா எல்லோரினதும் கனவு தம் பிள்ளைகளை மேலை நாடுகட்கு அனுப்பி வைப்பதே. எனவே அவர்கள் பாலர் பிரிவிலிருந்தே ஆங்கிலக் கல்வியிலேயே மோகமுடையவர்களாக உள்ளனர் ஆரம்பக் கல்வி தமிழிலே மாத்திரம் வழங்கப் படவேண்டும் எனக் கலைஞர் அரசு கொண்டு வந்துள்ள சட்டம் எத்தனை எதிர்ப்பினை நேர் கொண்டுள்ளது.

ஜெயலலிதா எதிராக அறிக்கை விடுறார்என்றால் அவரின் எடுபிடிகளும் இதனை ஆதரிக்கிறார்கள் என்று தானே அர்த்தம்? ஆகவே தாய்வழிக் கல்வி என்பது தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டிலே அடிநிலை ஏழை மக்களுக்கே தான் அல்லாமல் உயர் மட்டத்தோருக்கல்ல; மேலும் தொழில் சார்பாக வேறு மாகாணங்களிலே குடியேறிய தமிழ் நாட்டுத் தமிழர்களின் வாரிசுகள் தமிழை மறந்துநாளாகின்றன ஓரளவிறகு தமிழ் மொழி தன் தூய நிலையிலே காப்பாற்றப் படுகிற ஒரே நாடு தமிழ் ஈழம் மட்டுமே அங்கும் போராட்டம் முடிந்து ஈழம் கண்ட பின் யாதுநடக்குமோ யாம் அறியோம்.

தொழில் சார்ந்தமொழியாகத் தமிழ்தாக்குப்பிடிக்கும் சாத்தியம்பற்றி இது வரை சொன்னோம் எனவே அடுத்ததாக பண்பாடுசார்புடையமொழியாகத் தமிழ் அழிவைத் தாங்கிக்கொள்ள முடியுமாஎனப் பார்ப்போம்.

பண்பாடு என்பதுகடைப் பிடிக்கும்விழுமியங்கள்கற்றுக்

→02ஆம் பக்கம் பார்க்க

அடுத்து மிகமுக்கியமானதும், சர்ச்சைக் குரியதுமான விடயம் நமது ஆலயங்களில் நடைபெறுகின்ற வழிபாடு, ஆராதனை முறைகளில் மாற்றம் கொண்டுவருதல் மிக அவசியம். கோவில், பூசைகளும், ஏனைய சமய சம்பிரதாய நிகழ்வுகளும் முழுமையாகத் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும்.

## தினசரி தியானம்

### யோக நித்திரை

தூங்கி விழித் தென்னபலன்
தூங்காமல் தூங்கி நிற்கும்
பாங்கு கண்டால் அன்றோ
பலன் காண்பேன் பைங்கிளியே.

- தாயுமானவர்

உறக்கத்திலும் விழிப்பிலும் உன்னையே சார்ந்திருக்க அருள்வாய், ஈசா?

விழித்திருக்கும் போது மனதுவியவகாரமற்றிருக்க வேண்டும்: அதனால் பேருணர்வு உறுதி பெறுகிறது. பின்பு, உறக்கத்திலும் அப்பேருணர்வு மறைக்கப்படாதிருக்கிறது விழிப்புக்கும்உறக்கத்துக்கும்வேற்றுமை அகலும் போது யோக நித்திரை அடையப் பெறுகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## அவுஸ்ரேலியாவில் ஈழத்தமிழர்களின் எதிர்ப்பால் ஜானகவுக்கு வரவேற்பு ரத்து!

(மெல்பன்)

அவுஸ்ரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா அவுஸ்ரேலியா மெல்பன் நகரில் இடம்பெறவிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொள்ளச் சென்றபோது அங்கு திரண்ட ஈழத்தமிழர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால் நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்.

அவுஸ்ரேலிய மெல்பன் நகரில் 'தௌம்' என்ற பௌத்த சிங்கள அமைப்பு ஒன்று ''கிறைற்றன் மண்டபத்தில் தூதுவர் ஜானகப்பெரேராவின் வருகைக்கான ஏற்பாடுகளையும் நிகழ்வுக்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது.

தூதுவர் ஜானகபெரேரா மெல்பன் நகருக்குஉத்தியோகபூர்வமாக, முதற்தடவை விஜயம் ஒன்றை செய்வதனால் அவருக்கான வரவேற்பு ஏற்பாடுகளை மிகவும் பிரமாண்டமாக- தடல்புடலாக தௌம் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது:

வீதியில் செங்கம்பளம் விரிக்கப்பட்டு அலங்காரம் மேற்கொண்டு. கண்டி நடனமாதர் வரவேற்பு நடனமாட மேளதாளம் இசையருவி பொழிய தூதுவரை விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

திடீரென அவ்விடத்தில் திரண்ட சிறுவர்கள், முதியவர்கள், இளைஞர்கள்,பெண்கள், பெற்றோர்கள் என எழுநூறிற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் கிறைற்றன் மண்டபத்துக்கு முன்னால் திரண்டு ''கொடியவனே வெளியேறு'' என்று தூதுவருக்கு எதிராக கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் நடவடிக்கைகளைக் கண்டு அச்சமடைந்த பிரஸ்தாப பௌத்த அமைப்பு தூதுவரை மண்டபத்துக்கு வரவேற்பதற்கு செய்த ஏற்பாடுகளைக் கைவிட்டு. தூதுவருக்கும் நிலைமைபற்றிஎடுத்துரைத்தது.

இதனால் தூதுவர் ஜானகபெரேரா மெல்பன் நகருக்கு வராமல் இடையிலேயேதிரும்பிச் சென்றுவிட்டார்: (இ)

## மினிபஸ்ஸில் ஏறும் போது தவறிவிழுந்த சிறுமி நசியுண்டு மரணம்

[யாழ்ப்பாணம்]

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மினிபஸ்சை எடுத்துக் கொண்டு புறப்பட்ட சமயம். அதில் ஓடிவந்து ஏறிய சிறுமி தவறுகலாக கீழே விழுந்ததனால் பஸ்சில்லுக்குள் அகப்பட்டு நசிந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இத்துயரச் சம்பவம் நேற்று சுன்னாகத்தில் இடம் பெற்றுள்ளது;

சம்பவத்தில் சுன்னாகம் புகையிரத நிலையப் பகுதியைச் சேர்ந்த குணசீலன் பென்சிக்கா[வயது-6] என்ற சிறுமியே உயிரிழந்தவராவர்;

பிரஸ்தாப சிறுமியின் சடலம் தற்போது யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-10-12)

## 5 அமைச்சர்கள் உட்பட 15 எம்·பிகள் எதிரணியுடன் சேர்ந்து வாக்களிப்பர்?

(கொழும்பு)

பாராளுமன்றம் செப்-7 ம் திகதியோ அல்லது வேறு ஏதேனுமொரு திகதியிலோ கூடி நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடும் போது ஆளுங்கட்சியைச் சேர்ந்த 5 அமைச்சர்கள் உட்பட 15 வரையான எம்.பிக்கள் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து வாக்களிக்க உள்ளனர். அடுத்து வரவிருக்கும்பொதுத்தேர்தலில் அவர்கள் ஐ.தே.கவுடன் கூட்டாக தேர்தலில் போட்டியிடுவார்கள் இது தொடர்பான தீர்மானம் கடந்த ஒகஸ்ற் 29 ந் திகதி நடை பெற்ற, ரணில் விக்கிரமசிங்ககரு ஜெயசூரிய. காமினி அத்துக்கோறள மற்றும் பொ.ஐ மு. எதிர்ப்பாளர்கள் பங்கு பற்றிய கூட்டத்தில் எடுக்கப்பட்டது;

இதேவேளை ஜனாதிபதி குமாரதுங்க பாராளுமன்றத்தில் கொள்கை விளக்கவுரையை ஆற்றும் போது பொ. ஐ;மு· எதிர்ப்பாளர்கள் ஆளுங்கட்சி வரிசையில் இருந்து எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்று அமர்வார்கள் என்று தகவல் அறிந்தவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந)

### ஜே. வி. பியின்

நேற்றிரவு 9.30மணிக்கு பொதுஜன ஐக்கியமுன்னணியின் தோழமைக் கட்சிகளின் கூட்டமும் அதனைத்தொடர்ந்து ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டமும் நடைபெற்றது.

நீண்டநேரம் நடைபெற்ற பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் தற்போதய அரசியல் நெருக்கடியில் மாற்றுவழி ஏதும் இல்லாத நிலையில் ஜே·வி;பியின் நிபந்தனைகளைஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்தார்.

அரசின் முடிவு பிரதமரினால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் இரு சாராரும் இன்று கைச்சாத்திடுவர் என்று அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

ஜே. வி. பியின் கோரிக்கைகளுக்கு அரசு இணங்கியிருப்பதன் மூலம் பாரிய அரசியல் நெருக்கடி ஒன்றிலிருந்து பொ. ஐ ஐ. முன்னணி அரசு விடுபட்டுள்ளதாகவும் ஜே. வி; பி. வெளியிலிருந்து கொடுக்கும் ஆதரவுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு சொற்ப காலத்துக்காவது ஆட்சியிலிருந்து விட்டு தகுந்த நேரத்தில் பாராளுமன்றத்தைக்கலைத்து, பொதுத்தேர்தலுக்கான அறிவுறுத்தலை ஜனாதிபதி விடுப்பார் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### இனப்பிரச்சனைக்கு

நாட்டின் பிரதான பிரச்சினையான யுத்தத்திற்கு தீர்வு காண்பதே எமது பிரதான கடமை. இந்நடவடிக்கையிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் பின்நோக்கிச் செல்லாது.

அரசியல் தீர்வொன்றை முன்வைத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலம் பயங்கரவாதத்தை அடிபணிய வைக்கப்போவதாகவும் ஜனாதிபதி மேலும் கூறினார். [இ]

### நம்பிக்கையில்லா

பொதுஜனஐக்கியமுன்னணி அரசுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைக்க இருப்பது விசித்திரமாகவுள்ளது:

109பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கொண்டுள்ள அரசாங்கம் ஜே.வி.பியின்10 ஆசனங்களுடன் தனது பலத்தை119 ஆகஉயர்த்திக் கொண்டாலும் அரசாங்கக்கட்சியில் இருந்து சுமார் 20க்குக்குறையாத எம்.பிக்கள்அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானவாக்கெடுப்பின் போது ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து வாக்களிக்கவுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கைஇல்லா பிரேரணையை பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு எடுத்துகொள்ளட்டும் பார்ப்போம் என்றும் ரவி கருணாநாயக்கா மேலும் தெரிவித்தார். (வ

## யாழ்ப்பாணத்தில் களவுகளை நிறுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கை

### பொலிஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் கச்சேரியடிப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பொருட்கள் காணாமல் போனமை தொடர்பாகயாழ் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறையீடு தொடர்பாகயாழ்பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் களவுகள் மற்றும் பொருட்கள் கையாடல் தொடர்பாக யாழ் பொலிஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி தகவல் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் களவுகளைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸார் முனைப்புடன் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன்யாழ் கச்சேரிப் பகுதியடியிலுள்ள வீடொன்றில் இடம் பெற்ற சம்பவத்தின் உண்மை நிலை பற்றி ஆராய்வதில் பொலிசார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

### கடலில்

பிரஸ்தாப மீனவர்கள் 2பேரும் நேற்று பருத்தித்துறை நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு,நீதிபதியின் உத்தரவுக்கமைய விடுதலை செய்யப்பட்டனர்.

இம் மீனவர்களின் கைது தொடர்பாக மீனவர்களின் உறவினர்களால் பருத்தித்துறை ஈ.பி.டி.பியின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

மீனவர்களின் விடுதலை தொடர்பாக ஈ.பி.டி.பியின் யாழ் எம்.பி எஸ். தவராஜா வலிமேற்குபிரதேசபைசதலைவர் என். திரிலோகநாதன்வலிதெற்குபிரதேசசபைதலைவர் ஜீவா மற்றும் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீரங்கேஸ்ரன் ஆகியோர் படைத்தரப்புடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

இதேவேளை ஏனைய 16 மீனவர்களும் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யபடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது (இ-4,23-52)

### சிறுபான்மையின

இது இவ்வாறிருக்க அமைச்சர் பதவிகளை இழப்பவர்களுக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படுமெனவும், இதற்கு வசதியாகவே, ஜனாதிபதி பிரதியமைச்சர்களின் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களைப் பெற்றிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது; (ந)

### இலங்கை

களையும் இரண்டாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 299 ஓட்டங்களையும் பெற்றது; பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கையணி முதல் இனிங்சிலேயே 6விக் கெட் இழப்பிற்கு 610 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தைநிறுத்திக் கொண்டது.

இலங்கையணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மூன்று ரெஸ்ட் தொடரில் மொத்தமாக26 விக்கெட்டுகளை பெற்று சிறந்த பந்து வீச்சாளனாக தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த 16 வருடங்களின் பின்னர் ரெஸ்ட் போட்டியில் இலங்கையணி வெற்றியீட்டி சாதனை படைத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (இ-4-5)

### இனப்பிரச்சினை

எந்தவிதமான யோசனைகளையும் முன்வைக்கவில்லை என்று தொழில் அமைச்சர் அலவிமௌலானா நேற்று நள்ளிரவு வலம்புரிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார்,

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஜே.வி.பியை பொறுத்தளவில் அவர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து எம்முடன் பேசினார்கள்.அதற்கு அரசு உடன்பட்டுள்ளது. இந்நிலையில் அவர்களுடன்சேராமல் அரசிற்கு வெளியில் இருந்து ஆதரவு தரவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாவை பொறுத்தளவில் எப்பாடுபட்டாவது இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் பேசி தீர்வு காணவேண்டுமென்பதில் உறுதியாகவுள்ளார் என்றும் அமைச்சர் அலவி மௌலான குறிப்பிட்டார். [வ]




காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு

மகாநதி ஜுவல்லறி

உரிமையாளர்; S. K. S. மைந்தர்கள்

72A, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்·

(சி-2306]


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.